

# சிவதொண்டன்

மலர் 81

எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்

இதழ் 05 - 06

துர்முகி ஞ சித்திரை - வைகாசி (2017 மே - ஜூன்)




## உள்ளக்கிழியின் உரு

திருச்சிற்றம்பலம்

**உயிரா வணமிருந் துற்று நோக்கி**
**யுள்ளக் கிழியி னுருவெழுதி**
**உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தால்**
**உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி**
**அயிரா வணமேறா தானே றேறி**
**அமரர்நா டாளாதே ஆரூ ராண்ட**
**அயிரா வணமேயென் னம்மா னேநின்**
**அருட்கண்ணால் நோக்காதார் அல்லா தாரே**

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள்




**பொழிப்புரை:**

அயிராவணம் என்ற யானையை இவராது காளைமீது இவர்ந்து தேவர்களுடைய நாட்டை ஆளாமல் திருவாரூரை ஆண்ட ஐயுறாத தன்மையை உடைய நுண்மணல் உருவினனாகிய உண்மைப் பொருளே! உயிர்ப்பு இயங்காது மூச்சை அடக்கித் தியானம் செய்து உள்ளமாகிய துணியில் உன்படத்தை எழுதிச் சமாதி நிலையில் இருந்து உயிரை உன்னிடம் அடிமை ஓலை எழுதி ஒப்படைத்து உன் கையில் வழங்கி உன்னால் சிறப்பு வகையில் உணரப்படும் அடியாரோடு உடனாய் இருத்தி. என் தலைவனே! நீ வழங்கிய அருளாகிய கண் கொண்டு உன்னை உணராதவர்கள் உன் இன்பத்தைப் பெறுதற்கு உரியவர் அல்லர்.

உ
சிவமயம்

# அறிக்கை

| பொருள் | காலம் | நாள் | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| யாகம் | 02.04.2017<br>07.05.2017<br>04.06.2017 | ஞாயிறு<br>ஞாயிறு<br>ஞாயிறு | காலை 8.00 மணிமுதல் | சிவதொண்டன் நிலையம் யாழ்ப்பாணம் |
| ஆயிலியம் | 06.04.2017<br>03.05.2017<br>31.05.2017<br>27.06.2017 | வியாழன்<br>புதன்<br>புதன்<br>செவ்வாய் | நண்பகல் | யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையம் கொழும்புத்துறை |
| | | | பிற்பகல் | செங்கலடி சிவதொண்டன் நிலையம் |

**குருபூசை :** பங்குனி ஆயிலிய நாள் (06.04.2017) வியாழக்கிழமை எங்கள் குருநாதனது ஐம்பத்து மூன்றாவது குரு பூசைநாள். கொழும்புத்துறை சமாதிக் கோவிலிலும், சிவதொண்டன் நிலையத்திலும் குருபூசைக் கொண்டாட்டங்கள் நிகழும். குருபூசைக்கு முந்திய மூன்று நாட்களும் சிவதொண்டன் நியைத்து ஆச்சிரம வாழ்வு நாட்களாக அநுட்டிக்கப்படும். இந்நாட்களில் நற்சிந்தனை முற்றும் ஓதி நிறைவு செய்யப்படும். குருபூசை நாளன்று முற்பகல் 9.00 மணிமுதல் சுவாமிகளது திருமேனிக்கு திவ்வியமான அபிடேக ஆராதனைகள் நிகழும். பூசனை முடிவில் மகேசுரபூசையும் அன்னதானமும் நடைபெறும்.

## பொருளடக்கம்


விடயம் — பக்கம்

1) ஐயனே சற்குருநாதா 01
2) உள்ளக் கிளியின் உரு 02
3) கீதை வழங்கும் யோக தரிசனம் 04
4) ஈயாதார்க்கு இல்லை இம்மை மறுமை 07
5) துறவி லாறன்ஸ் 08
6) சோதி சொரூபன் 11
7) சற்குரு தரிசனம் (ஆசிரியர்) 15
8) நற்சிந்தனை 17
9) சிவசிந்தனை 20
10) NATCHINTHANAI 21
11) Jaffna Jyothi - Light of Jaffna 22
12) THE AMRITANUBHAVA 25

# சிவதொண்டன்

எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்

மலர் : 81 துர்முகி ௵ சித்திரை - வைகாசி (2017 மே - ஜுன்) இதழ் : 05 - 06


உ
சிவமயம்

## ஐயனே சற்குருநாதா

இராகம் : சஹானா தாளம் : ஆதி

பல்லவி

ஐயனே சற்குரு நாதா - உனை
யண்டிவந் தேனருள் தாதா
துய்யனே சொற்பிர போதா - உனைத்
தோத்திரஞ் செய்தேன்பொற் பாதா (ஐய)

சரணங்கள்

ஈயாத புல்லரைக் கூடி - நானும்
இடர்ப்பட் டேன்வெகு கோடி
ஓயாம லுன்புகழ் பாடி - நானும்
ஓடிவந் தேனுனைத் தேடி (ஐய)

ஆதார மாறையுந் தாண்டி - அருள்
அம்பலத் தேநின்று வேண்டி
சூதான மனந்தினந் தூண்டி - நானுந்
தொடர்ந்துவந் தேனுனைத் தாண்டி (ஐய)

# எங்கள் உள்ளக் கிழி யோகசுவாமிகள்

பெருமான் உலகுயிர்களை ஆட்கொள்ளும் போது கொள்ளும் கோலம் பசுமரத்தாணிபோல் அவ்வுயிர்களில் பதியப்படுகிறது. நம் சமயகுரவர்களும் மெய்யடியார்களும் தம்மை ஆட்கொண்ட பெருமானின் கருணைத் திருவுருவை உள்ளக்கமலத்தில் உள்ளிருத்தி மனத்தகத்தான் என் கண்ணுளானே என்று என்றும் மறவாது கண்டுகொண்டிருந்தனர். இப்பெருமக்கள் என்றும் மறவாத தம் அகக்காட்சியை நாமும் அறிந்தனுபவப்பட சொல்லோவியமாக்கியுள்ளனர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம்மைப் பெருமான் ஆட்கொண்ட போது பாடிய முதற் பதிகத்தில் **எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத் துன்னை வைத்தாய்** என்று பாடுகிறார். மாணிக்கவாசக சுவாமிகள் **இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான்** என்று அருளிச் செய்திருக்கிறார். நாவரசர் **நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்** என்று பாடியிருக்கிறார். சம்பந்தப் பெருமான் **உள்ளம் கவர் கள்வன்** என்று பாடியிருக்கிறார்.

யோகசுவாமிகள் தம்மை ஆண்ட செல்லப்பதேசிக வடிவை "**கண்ணே உறங்குறங்கு கார்வண்ணா நீயுறங்கு எண்ணேன் பிறதெய்வம் என்னிதயத்தே நீயுறங்கு**" என்று இதயவெளியில் என்றும் பொதுநடம் புரியும் அசபை எனும் யோக அநுபவமாகக் கண்டு தாண்டவத்தைத் தாலாட்டாக வடித்துள்ளார்.

யோகசுவாமிகளும் தம் அடியார்களை இனிய அருள்சொரிந்து இடர்நீக்கி ஆண்டருளியிருக்கிறார். சுவாமிகள் ஆட்கொண்ட கோலத்தை அன்பர்கள் தம் அகத்தில் என்றும் கண்டுகொண்டிருந்தனர். கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் என்று மாணிக்கவாசக சுவாமிகள் பாடுவது போல் உள்ளக் கிழியின் உருவாகத் திகழும் யோகசுவாமிகளை,

1. மெய்யடியார்களது அனுபவமூடாகக் காண்பதும்
2. சுவாமிகள் சித்தத்தில் திகழும் தகுதிக்கான மனப்பாக்கியத்தையும்
3. சுவாமிகள் காட்டி அருள்புரியும் உபாயத்தையும் காண்பது இக்கட்டுரையின் நோக்கம்.

### 1. மெய்யடியார்களின் அனுபவம்

**செல்லத்துரை சுவாமிகளின் அனுபவம்**

சிவதொண்டன் நிலையம் உதித்த ஆரம்ப நாட்களில் நிலையத்தைப் பார்க்கும் பொறுப்பு யோகசுவாமிகளால் செல்லத்துரை சுவாமிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. செல்லத்துரை சுவாமிகள் சிவதொண்டனுக்கு வந்த ஆரம்ப நாட்களில் ஒருநாள் வழிபாட்டிற்காகச் சுவாமி படம் வேண்ட நகருக்கு நடந்து சென்று கொண்டிருந்தனர். யோகசுவாமிகளும் சிவதொண்டனை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தார். யோகசுவாமிகள் செல்லத்துரை சுவாமிகளிடம் எங்கு போகிறாய் எனக் கேட்டனர். அவர் தாம் வழிபாட்டிற்காகச் சுவாமி படம் வாங்கப் போவதாகக் கூறினர். யோகசுவாமிகள் செல்லத்துரை சுவாமிகளிடம் "படம் பார்க்கப் போகிறாயோ? பார்" என ஒரு காட்சி காட்டினர். யோகசுவாமிகள் பார் எனக் காட்டிய அருட்காட்சி, செல்லத்துரை சுவாமிகளுக்கு சித்தத்தில் நித்தம் கண்டுகொண்டிருக்கும் சுவாமிகளின் பூரணக் காட்சியை நல்கியது.

ஒருமுறை யோகசுவாமிகள் அன்பர்கள் புடைசூழ வீற்றிருந்தனர். செல்லத்துரை சுவாமிகள் யோகசுவாமிகளை வீழ்ந்து வணங்க ஆயத்தமான போது சுவாமிகள் தடுத்து நாவற்குழி செல்லும் வரை கும்பிட்டுக் கொண்டு செல் எனப் பணித்தனர். நடந்து கொண்டே எவ்வாறு வழிபட்டுச் செல்வது யோகசுவாமிகளின் அருள் வாக்கால் மனத்தகத்தே திகழும் யோககுருபரனை ஆழ்ந்துள்ளே வணங்கும் அகப்பூசை செல்லத்துரை சுவாமிகளுக்கு வாய்த்தது.

**மயில்வாகனம் மாணிக்கம்மாளின் அனுபவம்**

மாணிக்கம்மாள் நாடோறும் சுவாமியைக் கும்பிட்ட பிறகு ஒரு ஆண் குழந்தை வேண்டி வழிபட்டு வந்தனர். ஒருமுறை யோகசுவாமிகளிடம் சென்று வணங்கி நின்றபோது "வர இருக்கும் போது ஏன் அவசரப்பட்டுக் கேட்க வேண்டும்" என்று கூறி ஒரு தோடம்பழத்தை மாணிக்கம்மாள் பக்கமாக உருட்டி விட்டனர். அடுத்த ஆண்டு குழந்தைப் பேற்று வேளையில் யோகசுவாமிகளின் அற்புதமான தரிசனம் மாணிக்கம்மாளுக்கு வாய்த்தது. மகபேற்று வேளையில் மரண அவத்தையில் நொந்து சிவதொண்டன் இதழில் வந்த

**"ஓதுவார் தீவினை உடன் தீர்க்கும் தெய்வமே**
**மாதுமை பாகனே மான்மழுக் கையனே**
**பாதுகாப் பதுகடன் பாரேழு முன்னிடம்**
**மீது நீ கிருபைவை வேலையிலங் கையானே"**

எனும் நற்சிந்தனையை மனதில் நினைந்து வேண்டினர். வெண்ணரை முடியும் தாடியும் கருணை பூத்த திருமுகமுமாய் தோன்றிய சுவாமிகளின் பெரிய அளவிலான அருட்கோலத்தைக் கண்டனர். கண்டதும் சுகானந் தத்தில் மூழ்கினர். நோவு நொம்பலமெதுவுமின்றி குழந்தை பிறந்தது. ஆபத்சகாய மூர்த்தியாக அபய மளித்த சுவாமிகளை என்றும் மறவாது கண்டு கொண்டி ருக்கும் பேறு அப்பெருமாட்டிக்கு வாய்த்தது.

**செல்வி யோகபூசனி அவர்களின் அனுபவம்**

மலை நாட்டிலே இருந்த சமயம் ஒரு பேரிடரில் சிக்கி

அம்மையார் மயக்கமடைந்தனர். அவ்விடத்திலே தோன்றிய யோகசுவாமிகள் அம்மையாரைக் காத்தாண்டு கொண்டனர். அன்று காத்தாண்ட கருணா மூர்த்தியை என்றும் மறவாது கண்டு நன்றியுடன் யோகசுவாமிகளின் சமாதியை இன்றும் பூசித்திருக்கும் பேறு அம்மையாருக்கு வாய்த்திருக்கிறது.

**வைரவமுத்து அவர்களின் அனுபவம்**

மு. வைரமுத்து அவர்கள் சுவாமியைத் தரிசித்த முதற்தரிசன முடிவிலே யோகசுவாமிகள் நீ எப்போது கொழும்பு திரும்புகிறாய் என்று கேட்டார். வைரமுத்து அவர்கள் மறுதினம் திரும்ப எண்ணியிருப்பதாகக் கூறினார். அதற்கு சுவாமிகள்,

"ஒரு பொல்லாப்புமில்லை. நீ போய்வா. **கொழும்பிலிருந்து அடிக்கடி வரவேணும் என்று நினையாதே. நீ அங்கே இரு நான் இங்கே இருக்கிறேன். இருவரும் ஒருவரை ஒருவர் கண்டு கொண்டிருக்கலாம்"** எனத் திருவாய் மலர்ந்தனர்.

கொழும்பிலிருந்து கொழும்புத்துறையிலுள்ள யோகசுவாமிகளை எவ்வாறு கண்கொண்டிருப்பது. உள்ளக்கமலத்திலேயே அவ்வாறு கண்டு கொண்டிருக்கலாம். யோகசுவாமிகள் தமது திருமுகம் ஒன்றிலே **"அடியேனுக்கு மடம் ஒவ்வொருவருடைய இதயமும் மரநிழலும் சந்நிதியும் என அறிக"** என்று அருளியுள்ளார். இவ்வாறு உள்ளக்கமலத்தில் வீற்றிருக்கும் சுவாமிகளைத் தரிசித்துக் கொண்டிருந்த சுகானுபவத்தில் தாம் ஆக்கிய நூலுக்கு அழகிய பெயரைச் சூட்டியுள்ளார். அது "என் நெஞ்சில் இடங்கொண்ட பெரியர் யோகசுவாமி."

**2. சுவாமிகள் சித்தத்தில் திகழும் தகுதிக்கான மனப் பாக்கியம்**

"எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏழை நெஞ்சம் புண்ணாகச் செய்ததினிப் போதும் பராமரமே" எனத் தாயுமான சுவாமிகள் பாடுகின்றனர். சிந்தி சிந்தி சிந்தி சிவகதி மந்திரம் இதுவே மனத்திடை மதியே என யோகசுவாமிகள் பாடியிருக்கிறார். நாம் எமது புறச் சிந்தனைகளால் எம் மனத்தை நிரப்பி வைத்திருக்கிறோம். அவ்வாறான எண்ணங்களை நீக்கினால் சிந்தனைக்குரிய சிவம் எம் அகத்தில் தானாய் விளங்கித் தோன்றும். இதற்கு மேல்வரும் கதை விளக்கமாக இருக்கிறது.

ஒரு கிராமத்தில் இரு பெரியவர்கள் இருந்தனர். ஒருவர் நீரிலே நடப்பவராயும், வளியிலே மிதப்பவராயும் இவ்வாறு பல ஆற்றல்களை வெளிப்படுத்து வராக இருந்தார். மற்றயவர் வேர்த்தால் குளித்துப் பசித்தால் புசித்து உலகத்தவர் போல ஒழுகினர். இக்கிராம மக்கள் எதிர்மாறாக உலகத்தவர் போல அமைதியாக ஒழுகிய பெரியவரிடமே சென்று வணங்கி வந்தனர். இதை அவதானித்த ஒரு இளைஞன் அப்பெரியவரிடம் சென்று உங்களிடம் ஒரு ஆற்றலும் வெளிப்படுவதில்லை. அப்படி இருந்தும் உங்களிடம் ஏன் இவ்வளவு மக்கள் வருகிறார்கள் என அப்பெரியவரிடம் கேட்டான். அப்பெரியவரும் அதற்கான காரணம் தனக்கும் தான் தெரியவில்லைத் தம்பி. எனினும் என்னிடம் வந்த நீ தேனீர் அருந்திச் செல்கிறாயா என்று கேட்க இளைஞனும் சம்மதித்தான்.

பெரியவர் ஒரு கோப்பை நிறைய தேனீருடன், தேனீர் நிறைந்த இன்னொரு பாத்திரத்தையும் கொண்டு வந்தனர். இளைஞன் முன்பு தேனீர் நிரம்பிய பாத்திரத்தை வைத்து மேலதிகமாகக் கொண்டு வந்த தேனீரையும் தேனீர் நிரம்பிய பாத்திரத்தில் ஊற்றினார். ஊற்றிய தேனீர் வெளியே பாய்ந்தது. இளைஞன் பொறுமையிழந்து இவ்வளவு பொதுமக்களும் வந்து போற்றி செய்யும் பெரியவரே இவ்வளவு மூடமான செயலை ஏன் செய்கிறீர்கள் எனக் கேட்டான்.

அப்போது பெரியவர் இது தான் என்னுடைய பிரச்சனை. நீங்கள் இங்கு வரும் போது உங்களைப் புற எண்ணங்களால் நிரப்பி வருகிறீர்கள். நான் உங்களுக்குத் தர நினைப்பவை பயன்படுவதில்லை எனக் கூறினர். எனவே சுவாமிகள் உள்ளக்கிழியில் எழுந்தருள எங்களுடைய புறச்சிந்தனைகளைத் தவிர்த்து நற்சிந்தனையில் எம்மை ஈடுபடுத்து வோம்

**3. யோகசுவாமிகளின் காட்டி அருள்புரியும் உபாயம்**

யோகசுவாமிகள் தம் திருமுகங்கள் ஒன்றில்

உ

சிவமயம்

**இதோபார் நான் உனக்கு மிகவும் அணித்தாயிருக்கிறேன். என்னைக் காண்கிறாயா? நல்ல கூர்மையாகப் பார்? உள்ளேயிருக்கிறேன். இன்னும் தெளிவாய்ச் சொல்லில் நான் நீயாயிருக்கிறேன். பின் நீ ஏன் என்னை உனக்கு வேறாய் நினைக்கிறாய்** என்று தாம் உள்ளே இருப்பதைக் காட்டுகிறார்.

யோகசுவாமிகள் சிறந்த அடியார் சிந்தனையுள் தேனூறி நின்று பிறந்த பிறப்பறுக்கும் தெய்வம். உள்ளத்தினுள்ளே ஓங்காரமாய் நின்ற பெருமான். உள்ளத்தினுள்ளே விளங்கும் குருபரன் என்றும் எம்முடன் கூட இருப்பவர். என்றும் எம்மை விட்டுப் பிரியாதவர். புறத்திலே தோன்றும் புற வடிவங்களை விட அகத்திலே தோன்றும் குரு, எமது சொந்தக் குரு, அந்தச் சொந்தக் குருமணியை எமது அகத்திலே எழுதி எழுதிப் பார்ப்பதே எமது மனப்பாக்கியம். குருபரனின் மானிடக் கோலம் மறையலாம். புறக்காட்சிகள் அயலாகலாம். எம் உள்ளே உள்ள குருபரன் எம்முடன் கூட இருந்து கண்டு காட்டி வைப்பார். இதற்கான தத்துவச் சான்றாக சிவஞானபோத பதினோராம் சூத்திரம் திகழ்கிறது.

காணும் கண்ணுக்குக் காட்டும் உள்ளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன் கழல் செலுமே.

உள்ளக் கமலத்தில் திகழும் யோகசுவாமிகள் தம்மைக் கண்டு எம்மவருக்குக் காட்டுவதனால் அவர் மீது அன்பு பெருகும். அவ் அன்புப் பெருக்கினால் எமக்கு திருவடிப் பேறும் கிடைக்கும்.

எதிர்வரும் சுவாமிகளின் குருபூசையில் உள்ளக் கமலத்தில் பெருமான் விளங்கித் தோன்ற பிரார்த்தனை செய்வோமாக.

# கீதை வழங்கும் யோக தரிசனம் (தொடர்ச்சி)

## அத்தியாயம் I
## அர்ச்சுன விஷாத யோகம்

### 1.1 துயரமும் ஒரு யோகமே

கீதையின் முதலாவது அத்தியாயம் எதுவித முக்கியத்துவமும் இல்லாதது போலப் பெரும்பாலான வாசகர்கள் விரைவாகவே அதனை வாசித்து அடுத்த அத்தியாயங்களுக்குச் சென்று விடுகின்றனர். அதற்கு எதுவித விசேட முக்கியத்துவமும் இல்லை என்றும் அது வெறும் முகவுரை மட்டுமே என்றும் கருதுகின்றனர். எனினும் அது தவறாகும். அது முகவுரையாக அமைந்த அத்தியாயம் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. எனினும் எதற்கு அது முகவுரை? அது மகாபாரத இதிகாசக்கவிதையின் வரலாற்றுச் சூழ்நிலைக்கான முகவுரையோ அல்லது தத்துவ போதனைகளின் ஓர் அமைப்புக்கான முகவுரையோ மட்டும் அன்று. அதனைத் தகுந்த முறையில் புரிந்து கொள்வோமாயின் எமக்கு அது மிக அர்த்தமுள்ள முக்கியமான ஒன்றாக இருக்கும். ஏனைய அத்தியாயங்களைப்போலவே அதுவும் யோகம் என்றே அழைக்கப்பெறுகிறது. அதாவது அது அர்ச்சுன விஷாத யோகம் என்ற தலையங்கத்தை உடையது. அதன் பொருள் அர்ச்சுனனது துயரம் பற்றிய யோகமாகும்.

### 1.2 யுத்தகளத்தைப் பார்வையிடல்

நித்திரையிலிருந்து துயிலெழுவது போல ஆன்மா அது புதையுண்டுள்ள தெளிவில்லாத நிலையில் இருந்து வெளித்தோன்றும் ஒரு நிலையிலேயே கீதை ஆரம்பமாகின்றது என்பதை நாம் காண்கின்றோம். ஓர் ஆன்மா என்ற வகையில் அர்ச்சுனன் தனக்கு எதிராகத் தனது எல்லா நண்பர்களும் உறவினர்களும், முந்தைய ஆசிரியர்களும் யுத்த விருப்பினராக இருக்கும் ஒரு பயங்கரமான பிணக்கு நிலையினைத் தான் எதிர்கொள்வதைக் குருஷேத்திர யுத்தகளத்தில் காண்கிறான். இந்த யுத்த களத்தில் நின்றபோது பிரவிருத்தி, நிவிருத்தி என்று அழைக்கப்படும் எதிர்எதிர்ச்சக்திகளை நேருக்கு நேர் சந்திக்கும் தர்ம ஷேத்திரம் என்று அழைக்கப்படும் கடமை பற்றிய களமாக அதனை அவன் காண்கின்றான். தெய்விகனான கிருஷ்ணனால் வழிப்படுத்தப்பெறும் ஒரு நிலையில் இருந்து எதிரிகளான இரண்டு படைகளுக்கும் இடையே நின்று ஆன்மாவான அர்ச்சுனன் யுத்த நிலைமையை அவதானிக்கின்றான்.

### 1.3 விழிப்புணர்வும் விராட யுத்தமும்

ஆன்மா அகஉலகங்களில் மறைந்து இருக்கும் வரை அவ்வாறான பிணக்குக்குச் செவிசாய்க்கக்கூடிய நிலை வராது. ஒழுங்கற்ற முறையில் இந்த அறிமுகப்பகுதியில் விவரித்தவாறு அது ஒரு அனுபவத்தில் இருந்து இன்னொரு அனுபவத்துக்கு மாறிமாறிச்சென்று கொண்டு இருக்கும். ஆனால் இந்தநிலை நீடிக்கப்போவதில்லை. ஆன்ம விழிப்புணர்வுக்குப்பின் விராட அரசனுடைய யுத்தத்தின் போது வெற்றியீட்டியதை அந்த விழிப்பின் அடையாளமாகக் கொண்டு ஆன்மா துக்கத்தை நன்றாக ஊக்குவிக்கும் ஒரு நிலையில் தன்னைக் காண்கின்றது.

### 1.4 ஆன்ம வெற்றிக்கு எதிரான சக்திகள்

பிரவிருத்தியின் அசுர சக்திகளோடு எதிர்பார்க்கப் படும் யுத்தத்தை உணர யுத்தகளத்தில் சங்குகளை ஒலிப்பது மிக இலகுவானது. ஆனால், திடீரென இரண்டு எதிர் எதிர்ப் போக்குகளுக்கும் இடையே ஆன்மா செயலற்று நிற்கும் போது வருகின்ற ஒரு அக உணர்வு ஒளிக்கீற்றில் அர்ச்சுனன் அந்த யுத்தத்தில் உள்ள எல்லாவற்றையும் முதல் தடவையாக உணர வருகின்றான். தனது எதிரிகளின் மத்தியில் உறவினர்களும், தனது பாலிய நண்பர்களும் மதிப்பிற்குரிய ஆசிரியர்களும் இருப்பதைக் காண்கின்றான். அத்துடன் அவன் தனது சொந்த இதயத்தின் இரத்தமே தனக்கு எதிராக இருப்பதையும் உணர்கின்றான். இந்த நீண்ட காலத் தூக்கத்தின் போது ஆன்மா எல்லாவகையான உறவுகளோடும் தொடர்பு கொண்டதாக இருக்கும். அத்துடன் அந்த ஆன்மா பல்வேறு இலட்சியங்களும் மரபுகளும் தன்னை வழிகாட்டுவதற்கு இடமளிக்கும். ஆனால் இப்பொழுது அந்த எல்லா வகையான உறவுகளும் அழிக்கப்படவேண்டும் என்பதை ஆன்மா உணரும் வாழ்க்கையில் குறிக்கோளாக இருந்து வந்த எல்லா இலட்சியங்களும் யுத்தகளத்தில் தியாகம் செய்யப்படவேண்டும் என்பதையும் ஆன்மா உணரும். ஏனெனில் இப்போது அவை பிரவிருத்தியின் வெளிநோக்குச் சக்திகளோடு அந்த இலட்சியங்கள் அணிதிரண்டு ஆன்மாவின் வெற்றிக்கு எதிராக நிற்பதனால் ஆகும்.

### 1.5 தன்னிலேயே தான் இருக்கவேண்டும்

இதுவரை இனம்,குடும்பம் என்ற குறுகிய வட்டத் திற்குள் வாழ்வதோடு ஆன்மா திருப்திப்பட்டுக் கொண்டு வந்திருக்கின்றது. சமூகத்துக்கும், நாட்டுக்கும் தான் ஆற்றவேண்டிய கடமைகளை நிறைவேற்றினால் போதும் என்று உறவுப் பிணிப்புகளினால் தளைப்பட்டிருப்பதை அது உணரும். தான் பிறந்து வளர்ந்த சமய, ஒழுக்க முறைகளுக்கு இணங்கவும் தனது குருமார்களின் இலட்சியங்களுக்கு இணங்கவும் வாழமுயற்சி செய்தால் அதுவே போதும் என்று அந்த

ஆன்மா எண்ணி வந்திருக்கும். ஆனால் சமுதாயங்களும், இனங்களும் தற்காலிகமானவை. ஆனால் ஆன்மா நிரந்தரமானது. எனவே ஆன்மா இறுதியில் தன்னி லேயே தான் ஆதரவாக இருக்கலாம் என்பதையும் உணரும். "எனது நாடு, எனது உரிமை, இது பிழை" என்ற எளிமையான கொள்கைகள் யாவும் முரண் பாடான விசுவாசங்களினால் அழிபட்டுக் கொண்டிருக்கும். ஆரம்ப நாட்களில் தன்னை உயர்த்தி வந்த அதே இலட்சியங்கள் தன்னை மேலும் வழிநடத்த ஆற்றல் இல்லாமல் இருக்கும். ஏனெனில் அந்த இலட்சியங்கள் மனத்தினால் உருவாக்கப்பட்ட வடிவங்களே அன்றி ஆன்மாவின் தேவைக்குப் போதியன அல்ல

### 1.6 பிணக்கு புறத்திலும் அகத்திலும்

உருவாக்கப்பெற்றிருக்கின்ற அமைப்புக்களுக்கும் ஏற்றுக்கொள்ளப் பெற்றிருக்கின்ற நடத்தைகள் நம்பிக்கைகள் என்பவற்றுக்கும் ஏற்ப ஆன்மா வெளியே மட்டும் பிணிப்புக்களைக் கொண்ட பிணக்கை உடையதாக இருக்காது. அக உலகிலும் அதே வித பிணக்குச் சூழ்நிலையையே எதிர்கொள்ளும். தனது ஆசைகளின் கூட்டமே தனக்கு எதிராக அணியிட்டு நிற்பதை ஆன்மா காணும். அந்த ஆசைகள் மரபுரீதியாகக் கேடு பயப்பவை என்ற அர்த்தத்தில் மட்டும் அமைவன அல்ல. அவற்றில் பெரும் பாலானவை ஊறுவிளைவிக்காத இன்பம் தரக் கூடியனவாயும், நண்பர்களால் சூழப்பெற்ற சமூகத்தில் பிரகாசிப்பவையாயும், பாதுகாப்பானதும் வசதி யானதுமான வாழ்க்கைக்கு எடுத்துச் செல்வனவாயும் இருக்கலாம். இன்னும் பல ஆசைகள், பல்வேறு இலட்சியங்களின் தலைமைத்துவத்திற்குக் கீழ் ஆன்மாவுக்கு எதிராகக் களத்தில் அணிதிரண்டு நிற்கும். கடந்த காலத்தில் தனக்கு எதிராக அணி திரழுவதில் நிறைவு கண்ட உறவுகள், உயர்ந்த பழக்கங்கள், உருவாக்கப்பெற்றுள்ள வழமைகள் எல்லாம் இருக்கும். நாட்டுப்பற்று என்ற மினுங்கும் இலட்சியங்கள் குடும்ப உறவுகள் சமய பக்தி என்பன எல்லாம் மிகவும் கசப்பானதாக மாறும். அவை எல்லாம் கவுரவர்களின் உணவை உண்டு வந்தவை ஆகும். அவை வழிகாட்டிகளாகவும், ஆசிரியர் களாகவும் பீஷ்மர், துரோணர் போலும் பணியாற்றி வந்திருந்தாலும் ஆன்மாவுக்கு எதிராக ஆயுதம் ஏந்தியிருப்பதால் அழிக்கப்பட வேண்டியன ஆகும்.

### 1.7 ஸ்தம்பிதநிலை

ஒவ்வொரு ஆன்மிக சாதகனும் எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை இதுவே ஆகும். அத்துடன் உடனடியாகவோ அல்லது சற்றுக்காலம் தாழ்த்தியோ அவன் அவற்றைக் கடந்து செல்லவேண்டும். அர்ச்சுனன் அந்த பெரிய துக்கநிலையை வெற்றி கொள்கின்றான் என்பது ஒரு ஆச்சரியமே ஆகும். தாங்க முடியாத சோகத்தினால்அவனது காண்டீபம் கை நழுவி விழத்தேர்த்தட்டில் அமர்ந்துவிடுகின்றான். ஆன்ம வழியைத் தேடுகின்றவர்கள் எல்லோருக்கும் இது விலக்க முடியாத அனுபவமாக வந்து அமையும். "எவர்களுக்காக நாம் இராச்சியத்தை விரும்பி னோமோ, இன்பங்களையும் சுகபோகங்களையும் விரும்பி னோமோ, அவர்களை யுத்தகளத்தில் கொன்று குவிக்க வேண்டுமாயின்'' அந்த வெற்றியின் பெறுமதிதான் எவ்வளவு? எல்லா ஆசைகளையும் துறந்தால் முழுவாழ்க்கையுமே வீண்விரயம் ஆகாதா? வீணானதும் வெறுமையானதுமான விதியை உபயோகித்து அவ்வாசைகளை அழித்து அதன் விளைவான பாலைவனத்தின் மத்தியில் ஆன்மா அரச கட்டில் ஏறவேண்டுமா? எந்த நோக்கத்துக்காக அப்படியான தியாகம் செய்யவேண்டும் என நாம் அழைக்கப்பட்டிருகின்றோம்? அதன் மூலம் எவ்வாறு நாம் நன்மை அடைவோம்?" அப்படிப்பட்ட இரத்தம் தோய்ந்த விருந்தில் பங்குகொள்பவரைக் காட்டிலும் உலகத்தில் பிச்சை எடுத்து உண்பது மேலானது அல்லவா? முற்றும் சிந்தித்து தெளிய முடியாத பாதையில் காலடி எடுத்து வைப்பதைக் காட்டிலும் பெறக்கூடிய இன்பங்களை அனுபவிப்பது சிறந்தது. வாழ்க்கையில் நாம் மிக விரும்பி வைத்திருந்தவர்களான எல்லோரது இறந்த உடம்புகளின் மேல் எம்மைக் கொண்டு செல்ல மட்டும் நிச்சயமான அந்தக் குறிக்கோளில் அடியெடுத்து வைக்கவேண்டுமா?

### 1.8 சந்தேகம்

எல்லாவற்றுக்கும் மேலாக இதயத்தில் ஒரு சந்தேகம் எழுகிறது. குடும்ப அழிவில் மறக்க முடியாத மரபுகள் அழிவதோடு அந்த மரபுகளின் அழிவில் சட்ட ஒழுங்கின்மை சமுதாயம் முழுவதையும் வெற்றி கொள்ளும். இந்த ஆசைகள் இலட்சியங்கள் எல்லாவற்றினதும் உலகின் பெரும் குழப்பத்துக்குக் காரணமாக அமையாதா? சமூகம் தனது அங்கத்தவர்களின் சாதாரண ஆசைகளது இருப்பின் மேலேயே தங்கி இருக்கின்றது. அத்துடன் அது ஒரு பக்கச்சார்பான நடைமுறை இலட்சியங்களோடு பிணிக்கப்பட்டுள்ளது. தெரியாத ஒரு குறிக்கோளை நோக்கி ஆன்மாவினது முன்னேற்றம் என்ற பெயரில் குழப்பத்தை உருவாக்க அதற்கு உரிமை உண்டா? காலத்தின் சோதனைக்கு இடமளித்து நிலையாக நிற்கும் அந்தச் சமூகச் சமநிலையை அழிக்கலாமா? ஆன்ம சாதகன் தனது ஆசைகளைக் கைவிடுவதன் மூலம் உலகத்தின் நாளாந்த வாழ்க்கையில் பங்குகொள்ளத் தன்னைத் தகுதியற்றவனாக ஆக்கிக் கொள்ள மாட்டானா? அத்துடன் பழைய மரபுக ளினால் கட்டியெழுப்பப்பெற்ற இலட்சியங்களை நொருக்கித் தள்ளுவதன் மூலம் அவன் உலகத்துக்குள் குழப்பத்தைக் கொண்டுவர மாட்டானா?

**"எமது பரிசுத்த நூல்களை ஒதுக்கவும் தெய்வங்களைப் புறக்கணிக்கவும். எல்லா ஆலயங்களில் இருந்தும் மனிதர்களை விரட்டி வெறுமையாக்கவும். பூசகர்களின் உணவுகளின் விதியை ஆட்டம் காணச் செய்யவும்.**

அப்படியான அமைப்பைச் சந்தேகிக்கவும் உனக்குத் துணிவு உண்டா?"

### 1.9 ஆசைகள் அழிக்கப்பட வேண்டும்

குறைந்த பட்சம் இவையே அந்தச் சந்தேகங் களாகும். அந்தச் சந்தேகங்களுள் சில நன்கு அடித்தளம் இடப்பட்டும் வேறுசில அப்படி அல்லாமலும் இதயத்தில் இருக்கின்றன. அவை தெளிவற்ற உணர்வின் ஏற்றுக்கொள்ளப்பெறாத மூலத்தை உடையன வாயிருந்தபோதும் நிசமானவையாகும். அவை வாழ்க் கையின் முன்னேற்றத்தில் இதயத்திலே இடம் பிடிக்கின்றன. ஆன்மாவுக்காக எல்லா ஆசைகளும் கொலை செய்யப் பெற்றுத் தியாகம் செய்யப்பட வேண்டும்.

### 1.10 தீர்மானம் அற்றநிலை

இந்தக்கட்டத்தில் இருள் எந்த ஒளிக்கதிராலும் ஒளியூட்டப்பெறுவது இல்லை. அத்துடன் ஆன்மாவின் அருகில் தெய்வீக ஆசான் நின்றபோதும் ஆன்மா அந்த ஆசானின் குரலைக் கேட்காது. ஆன்மாவின் கடந்தகால வளர்ச்சியினால் பிணக்கு நிலைக்குள் கொண்டு வரப்பட்டபோதும் யுத்தமுனையில் சமநிலையிழந்து ஆன்மா தனது இதயத்தைப் பலவீனமாக்கி தீர்மானம் எடுக்க முடியாத பயங்கரநிலையில் ஆழ்ந்து போகின்றது. அந்த நிலையில் வெற்றி உற்சாக மற்றதாயும் தோல்வியாகவும் காணப்பெறும்.

### 1.11 எமது பழக்கம்

இந்தத் தீர்மானமற்ற நிலையின் உண்மையான மூலம், எல்லா ஆசைகளும் பேராவல்களும் இறந்த சூழ்நிலையில் வாழ்க்கையின் எதிர்கால முன்னேற் றத்தில் இருக்கின்றது. ஆசைகளில் எல்லா செயல்களும் தமது வேர்களைக் கொண்டிருக்கும் ஒருவாழ்க்கைக்கு நாம் பழக்கப்பட்டிருக்கின்றோம். இதனால் நாம் வேறு எதனையும் கருத்துக்கு எடுத்துக் கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றோம். அதன்விளைாவாக அந்தவிதமான புதிய வாழ்க்கையின் பெறுமதிதான் என்ன என்று நாம் கேட்போம் கிருஷ்ணனை உடனே வைத்துக் கொண்டுள்ள போதும் அவனே எல்லாமும் என்பதை ஆன்மா இன்னும் கற்றுக் கொள்ளாமல் இருக்கும். அதாவது பெற்றோரும், மனைவியரும், பிள்ளைகளும் பிரியமானவர்களா யிருப்பதற்குக் காரணம் "ஆன்மா தனது உயர்வுக்காக" அன்றி அவர் அவரது நன்மைக்காக அல்ல என்பதை ஆன்மா கற்றுக் கொள்ளாமல் இருக்கும்.

### 1.12 புத்தரும் அதே துக்கமும்

எனினும், துக்கத்தின் இந்த அனுபவம், மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகும், புத்தரும் தனது நான்கு உயர்ந்த உண்மைகளுள் ஒன்றாக வாழ்விலுள்ள தவிர்க்க இயலாத துக்கத்தை தனது எடுப்பான வார்த்தை களினால் முன்வைப்பதை நாம் காணலாம்.

### 1.13 கிருஷ்ணனின் குரல்

கிருஷ்ணனின் குரலை மௌனத்தில் மட்டும் கேட்க முடியும், ஆசைகளின் நச்சரிப்பால் இதயம் நிறைக்கப் பெற்றுள்ளவரை அக்குரலின் இனிய தொனியைக் கேட்க முடியாது. புற உலகம் முற்றாக இருளும் வரை எம்மால் தெய்வீகத்தாரகையின் ஒளிக்கதிரைக் காணமுடியாது. அந்தக்கதிர் என்றும் பிரகாசித்துக் கொண்டு இருந்தாலும் எமது புறவாழ்வில் பிரகாசிக்கும் ஒளி மறையும் போது அதனை நாம் முதன்முதலாக உணருவோம்.

### 1.14 ஒளி நட்சத்திரம்

பின்பு அந்த ஒளி நட்சத்திரம் "ஆயிரம் சூரியர்களின் ஒளி ஆகாயத்தில் ஒளிர்வதுபோல பிரகாசிக்கும்; அது அந்த மகாத்மாவின் புகழை ஒத்ததாக இருக்கும்". அந்தக் குரலின் கம்பீரமான நளின அசைவுகளை எமது உலகிலுள்ள எல்லா இரைச்சல்களும் சேர்ந்து கூட அடக்கமுடியாது. உலகின் கடற்கரைகளின் மீது அலைகளின் முழக்கம் என்றும் இருப்பது போல யுகம் யுகமாக என்றும் அந்தக் குரல் எதிரொலித்துக் கொண்டு இருக்கும்.

### 1.15 பாடும் குயில்

ஆனால் அந்தப் புகழ்களுக்கான காலம் இன்னும் வரவில்லை. முதலில் அந்த வெளிச்சம் அகத்தே மங்கலான நட்சத்திரம் மின்னுவது போல இருக்கும். "பாடுங்குயில் தனது துணையைப் பிரியும் பாடலைப் பாடுவதுபோல "அந்தக் குரல் ஒரு பாடுங் குயிலாகத் தான் ஒலிக்கும். எனவே, சூரியனின் ஒளிமிகுந்த பாதையில் நடக்குமுன் ஆத்மசாதகன் இருள் மிகுந்த பள்ளத்தாக்கில் பிரவேசிக்க வேண்டும். வாழ்வின் சிரிப்புக்கும் அந்த ஒளிக்கும் அவன் தனது கண்களையும் காதுகளையும் மூடிக்கொள்ளவேண்டும். அத்துடன் தான் என்னவாக இருந்து வந்துள்ளேன் இப்போது எப்படி இருக்கின்றேன் என்பதும் அர்த்தமற்றவை என்பதை அந்தத் துக்கத்தில் உணர்ந்து கொள்ள வேண்டும். தனது இதயத்துக்கு உள்ளேயே எல்லாம் உண்டு என்ற ஆனந்தத்தில் அவன் பார்க்கவும் காணவும் முன்பு அப்படி உணர்ந்து கொள்ளவேண்டும்.

### 1.16 முதலாவது பாதையின் நிறைவு

தனது வில்லையும் அம்புகளையும் போட்டுவிட்டு தனது துக்கத்தில் மூழ்கிய மனத்தோடு அர்ச்சுனன் தேர்த்தட்டில் அமர்ந்து விட்டான். அத்துடன் சோகமும் துக்கமும் உள்ள நிலையில் கீதையின் முதலாவது அத்தியாயம் முடிகிறது. அதேவேளை கீதையின் பாதையில் உள்ள முதலாவது கட்டமும் நிறைவெய்துகின்றது.

தொடரும்...

# ஈயாதார்க்கு இல்லை இம்மை மறுமை

**பரோப காரார்த்தம் இதம் சரீரம்** என ஒரு வசனம் வடமொழியில் உண்டு. எங்களுடைய இந்த உடம்பு பிறருக்கு உதவி செய்தலுக்கே உரியது என்பது இவ் வடமொழி வசனத்தின் கருத்தாகும். இதே கருத்தில் தமிழ்மொழியிலும் மிகப் பல வசனங்கள் இருக்கின்றன.

"இருந்தோம்பி இல் வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற்பொருட்டு"

என்ற குறளும் கூட இக் கருத்தையே வலியுறுத்து கின்றது. இக் குறளில் வரும் வேளாண்மை என்னும் சொல்லுக்கும் உபகாரியாம்தன்மை என்று பொருள் கூறுவர்.

மனைவி - மக்கள் - வீடு - உத்தியோகம் என்ப வற்றுடன் கூடிய இல்வாழ்க்கை விருந்தினருக்கு உபசரித்து பிறர்க்கு உபகாரமாக வாழ்தலையே நோக்க மாக பிரதான குறிக் கோளாக உடையதாயிருத்தல் வேண்டும் என்கின்றார் வள்ளுவர்.

இக் காலத்தில் பிறருக்கு உபகாரம் செய்வதால் ஒருவன் தன்மனைவி பிள்ளைகளுக்கு உரிய பொருளை வீணாக்கும்நிலை உண்டாகிவிடும் என்ற அச்சம் உள்ளது. இந்த அச்சத்தின் விளைவாக "தனக்கு மிஞ்சித்தான் தானம்" என்ற விபரீத கருத்து உண்டாக் கப்பட்டுள்ளது.

உலக வரலாற்றில் கொடையால் புகழ்பெற்றவர் களின் வரலாறுகள் நூற்றுக்கணக்கில் உள. இப்படியான வரலாறுகளில் ஒன்றில் கூட தனக்குமிஞ்சித்தான் தானம் என்ற கருத்து துளிகூட இல்லை.

பாரி தனக்கு உரிய - உபயோகமாகும் தேரை முல்லைக்கு வழங்கினான் என்பது முதல் சிபிச்சக்கர வர்த்தி தன் உடலையே புறாவின் எடைக்கு ஈடாக வெட்டிக் கொடுக்க முயன்றான் என்பது வரையான வரலாறுகள் பிறர் தேவையை நிறைவேற்றுதலையே நோக்கமாகக் கொண்டிருந்திருக்கின்றன.

பாரியைப் போலவோ - சிபியைப் போலவோ என்றில்லாமல்

**" யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை**
**யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி"**

என்ற தன்மையை அனைவரும் கடைப்பிடிப் பதவசியம்.

தானும் அனுபவிக்காமல் பிறருக்கும் உதவாமல் சேமிக்கப்படும் பொருளை தமிழ்த்தாயாகிய ஔவையார் "ஈயார்தேட்டு" என்றும் குறிப்பிட்டு அப்பொருள் சேமித்து வைப்பவர்களுக்கு பயன்படாது தீயவர்களால் கவரப்படும் என்றும் ஒரு இனிய இரகசியத்ததை வெளிப்படுத்தியிருக்கிறார்.

இதற்கும் மேலாக நம் யோக சுவாமிகள் ஈயாதார்க்கு இல்லை இம்மை மறுமை என்று அருளியிருக்கிறார். உழவு காலத்தில் ஊர் சுற்றி விட்டு அறுவடைக் காலத்தில் அரிவாளுடன் வயலுக்குப் போனவன் தன்மையை ஒரு பழமொழி குறிப்பிடும்.

உழவுக்காலத்தில் நெல் விதைப்பவனுக்கு அறுவடைக்காலத்தில் விளைச்சல் கிடைக்கும். இதே போல கொடுத்துவைப்பவனுக்கே புண்ணியப்பயன் பொருளுடைமையின் சிறப்பு கிடைக்கும். மிருகங்க ளுக்கு சுபாவமாக இல்லாத இரக்க உணர்வும் கொடுக்கும் வாய்ப்பும் மனிதப்பிறவிக்கே இயல் பாயமைந்திருக்கின்றன என்பதை ஒவ்வொருவரும் நன்கு சிந்திக்க வேண்டும்.

"வலியார் முன் தன்னை நினைக்கத் தான் தன்னின்
மெலியார் மேல் செல்லுமிடத்து"

என்ற உபதேசம் மனிதர்களைத் தவிர இவ்வுலகில் வேறு எந்த ஜீவராசிக்கும் செய்ய இயலாத தன்மை உண்டு.

துன்புறுபவர்களுக்கு தம்மால் இயன்றதை ஈயாதவர் இப்போகிடைத்த மனித வாழ்வின் மனிதத் தன்மையை இழந்தவராகவே மதிக்கப்படுவார்.

விதைப்புக் காலத்தில் விதைக்காது ஊர்சுற்றுவது போல இம்மையிலே உபகாரமாக வாழும் தன்மையின் அடையாளமாக ஈதலைச் செய்யாதவர் மறுமையிலும் தமக்குத் தேவைப்படும் புண்ணியம் இல்லாதவர்களாய் சிறுமைப்பட நேரிடும் என்பதையே ஈயாதார்க்கில்லை இம்மை மறுமை என்றருளியுள்ளார்.

இதுபோல நற்சிந்தனையில் உள்ள ஒவ்வொரு தொடரும் நல்ல சிந்தனையை வளர்க்க வல்லவையாய் இருந்தலைச் சிந்தித்து மகிழ்வோம்.

# துறவி லாறன்ஸ்

சர்வ சமய சமத்துவ நெறியை நமக்குக் காந்தியடிகள் காட்டினார். அதற்காகவே தம் உயிரையும் அர்ப்பணம் செய்து விட்டார். அவர் தந்த அந்த ஞானத்தை உணர்ந்து உய்வோமாக. எந்தத் தேசத்திலும் எந்த காலத்திலும் எந்த மதத்தினரிலும் சில ஜீவன் முக்தர்கள் தோன்றி விளக்கு அணையாமல் காத்து வந்திருக்கி றார்கள்.

லாரன்ஸ் என்ற கிறிஸ்துவத் துறவி இன்றைக்கு நானூறு ஆண்டுகளுக்கு முன் இருந்தவர். பூரண ஞானம் பெற்ற முனிவராகச் சாதாரண மனிதனுடைய வடிவத்தில் விளங்கினார். அவருடைய குணாதிசயங்களையும் உபதேசங்களையும் நம்முடைய நாட்டுப் பரம்பரை மார்க்கத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் படித்து அறிவது மிக நன்மை தரும்.

ஈசுவரன் இருக்கிறான் என்று நம்பி அனைவரும் அவனுக்கு வழிபாடு செலுத்துகிறோம். இது போதாது, போதவே போதாது என்பதற்குச் சான்று உலகத்தில் இன்னும் நடந்து வரும் பாவங்களே போதும். வழிபாட்டுடன் பல அப்பியாசங்களைப் பெரியோர் கள் சொல்லியும் செய்தும் காட்டியிருக்கிறார்கள். இந்தப் பலவித அப்பியாசங்களைத்தான் 'யோகம்' என்பார்கள். ஞான யோகம், தியான யோகம், கர்ம யோகம், ராஜயோகம், பக்தி யோகம் என்றெல்லாம் யோக முறைகளுக்குப் பெயர்கள் உண்டு.

கிறிஸ்துவத் துறவி யொருவர் தோழமை யோகம் என்று சொல்லக்கூடிய ஒரு முறையைத் தாமும் அப்பியாசம் செய்து பிறருக்கும் உபதேசித்தார். வாழ்க்கையில் எந்தச் சமயத்திலும் எந்தப் பெரிய அல்லது சிறிய வேலை செய்து கொண்டிருக்கும் போதும், ஆகார விகார வேளைகளிலும் சதா ஈசன் நமக்குத் தகப்பனாகவும், தாயாராகவும் தோழனாக வும் பக்கத்திலேயே இருந்து வருகிறான் என்பதை உணர்ந்து, அவனுடன் கூட்டுறவு வாழ்க்கை நடத்தலாம் என்பது லாரன்ஸ் துறவியின் உபதேசம். ஈசனை நமக்கு நெருங்கிய தோழனாக எப்போதும் கூடவே இருக்கும் படி செய்து கொள்ளும் சக்தி நமக்கு உண்டு. தீவிர அன்பைச் செலுத்தி அவனை அழைத்துப் பக்கத்தில் வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்தலாம். இந்தத் தோழமையைச் சம்பாதிப்பதே லாரன்ஸ் துறவியார் போதித்த மார்க்கம்.

''பிழை செய்துவிட்ட காலத்தில் அன்போடு அழைத்தால் பெற்ற தாயைப் போல் அவன் பக்கத்தில் வருவான். அருள் பொழிவான். நீ எடுக்கும் ஒவ்வொரு முயற்சியிலும் தைரியம் தரும் அண்ணனாகவும், கூட உழைக்கும் தம்பியாகவும், வழிகாட்டி நடத்தும் தந்தையாகவும் உனக்கு உதவி செய்யப் பகவான் எப் போதும் காத்திருக்கிறான். உள்ளம் நிறைந்த அன்போடு அழைத்தால் வருவான். உன்னோடு அவனும் சேர்ந்து உழைப்பான்'' என்று கிறிஸ்துவத் துறவி லாரென்ஸ் தாமும் செய்து பிறருக்கும் உபதேசித்தார்.

பால் மணம் மாறாத குழந்தை தாயை ஒட்டிக்கொள்ளுவது போலும், மேலே ஏறிப் படரும் கொடி கொம்பை அணைத்துக் கொள்ளுவது போலும் ஆண்டவனை ஒட்டிக்கொண்டு, சிறியதும், பெரியது மான காரியமும், ஓய்வும், விளையாட்டும் எல்லாம் அவனோடு சேர்ந்து செய் என்றார் அந்த ஞானி.

இது ஞான மார்க்கமா, கர்ம யோகமா, பக்தி மார்க்கமா என்று வேதாந்திகள் ஆராய்ந்து வகுத்துச் சொல்லலாம். ஞானத்தில் முளைத்துப் பக்தியில் வளர்ந்து, கர்மமும் ஞானமும் ஒன்றாகப் பிணைந்த மார்க்கம், அதாவது கண்ணன் காட்டிய வழியே என்றும் வைத்துக் கொள்ளலாம்.

யத் கரோஷி. யத் அச்னாஸி
யத்ஜு ஹோஷி ததாஸியத்
யத் தபஸ்யஸி கௌந்தேய
தத் குருஷ்வ மதர்ப்பணம்

என்று கீதையில் சொல்லப்பட்ட மார்க்கம் இதுவே யாகும். நான் தமிழாக்கித் தரும் இந்தக் கிறிஸ்துவ முனிவருடைய சிந்தனைகளும் அருள் மொழிகளும் படிக்கும் போது, ஆங்காங்கு உபநிஷத் பகவத்கீதை மந்திரங்களும், ஆழ்வார்கள் நாயன் மார்கள் வாசகங் களும் நினைவுக்கு வரலாம். அவற்றை யெல்லாம் குறித்து எழுதலாம். ஆனால் அப்படி ஏன் செய்ய வேண்டும்? உலகத்தில் எந்த நாட்டில் தோன்றிய ஞானிகளும் பக்தர்களும் ஒரே மெய்ப்பொருளைத் தான் காண்கிறார்கள். அவர்களுடைய சிந்தனைகளும் உபதேசங்களும் ஒன்றாகத்தான் இருக்கும். தத்தம் மக்களுக்குத் தத்தம் மொழியில் சொல்லியிருக்கி றார்கள். இதுவெல்லாம் நம்முடைய சாஸ்திரங்களி லேயே இருக்கிறது என்று எடுத்துக் காட்டிப் பெருமைப் படுவதில் என்ன பயன்? நம்முடைய சாத்திரங்களில் இருப்பதை உணர்ந்து நடந்து வந்தோமானால் அதுவல்லவோ பெருமைப்படுவதற்குக் காரண மாகும். அதுவல்லாமல் நம்முடைய பெரியோர்களைக் காட்டிப் பெருமைப்படுவதில் பயன் இல்லை.

எல்லாச் சமயங்களும் பராசக்தியை நோக்கிச் செல்கின்றன. எல்லாப் பக்தர்களும் ஆண்டவனை அனுபவித்துப் பாடியும் போதித்தும் வந்திருக்கிறார்கள். நாமும் அடக்கத்துடன் பகவானுக்கு உள்ளத்தில் இடம்

தந்து பக்தி செலுத்தி அவனை இதயத்தில் நிறுத்திக் கொள்வோமாக.

அவர் அவர் தம தம தறிவறி வகைவகை
அவர்அவர் இறையவர் என அடி அடைவர்கள்
அவர் அவர் இறையவர் குறைவிலர் இறையவர்
அவர்அவர் விதிவழி அடைய நின்றனரே.

லாரன்ஸ் துறவியின் காலத்தில் கத்தோலிக் என்றும் நவீன மார்க்கம் என்றும் கிறிஸ்தவர்களின் பேதம் இருக்கவில்லை. எல்லோரும் கத்தோலிக்கர்களாகவே இருந்து வந்தனர். கார்மேல் துறவி மடத்தில் லாரன்ஸ் என்பவர் தீட்சை பெற்ற துறவிகளுக்கு பரிசாரகம் செய்து வந்தார். இந்தப் பரிசாரகனுடைய குணமும் ஞானமும் பக்தியும் மிகப் புகழ் பெற்றுப் பரவிற்று. பல பெரியோர்கள் அவரைக் கண்டு பேசியும் உபதேசம் பெற்றும் வந்தனர். அப்படி உறவாடிய சிலர் எழுதி வைத்த குறிப்புக்களிலிருந்தும், லாரன்ஸ் எழுதிய நான்கைந்து கடிதங்களிலிருந்துமே துறவி லாரன் ஸைப் பற்றி நமக்குத் தெரிய வருவதெல்லாம்.

இவர் பிறந்த வருஷம் சரியாகத் தெரியவில்லை. கி.பி.1611ம் ஆண்டாக இருக்கலாம் என்று மட்டும் தெரிய வருகிறது.

பிரான்ஸ் தேசத்தில் லோரேயின் என்கின்ற பிரதேசத்தில் ஒரு கிராமத்தில் தெய்வ பக்தியோடு வாழ்ந்த ஒரு சாதாரணக் குடும்பத்தில் பிறந்தார். இவருடைய பெயர் நிக்கோலோஸ் ஹெர்மன். கார்மேல் ஆசிரமத்தில் சேர்ந்தபோதே அவருக்கு அங்கே லாரன்ஸ் என்ற பெயர் தந்தார்கள். பதினெட்டாவது வயதில் சிப்பாயாக ராணுவத்தில் சேர்ந்து காயமடைந்த படியால் அந்த உத்தியோகத்தை விட்டு விட்டுப் பிரெஞ்சு ராஜ்ய கஜானா அதிகாரி வீட்டில் சாதாரணக் குற்றவேல் புரியும் சேவக வேலை பார்த்து வந்தார்.

" ஒரு நாள் கடும் பனிக் காலத்தில் மரங்கள் எல்லாம் கருகிப் போய் இலை யுதிர்ந்து நிற்பதைப் பார்த்தேன். பனியில் கருகிப் போன இந்தத் தாவரங்கள் எல்லாம் பிறகு புத்துயிர் அடைந்து துளிர்த்து, பூவும் காயுமாகப் பொலிவு அடையப் போவதை எண்ணித் திடீர் என்று பராசக்தியைப் பற்றி அறிவும் உணர்ச்சியும் அடைந்தேன். அது முதற்கொண்டு என் உள்ளம் கடவுளைத் தொடர்ந்து சென்றது" என்று தம்மைப் பற்றி ஒரு சமயம் சொல்லியிருக்கிறார்.

எல்லோருக்குமே ஞானோதயமாவதற்கு ஏதேனும் ஒரு நிகழ்ச்சியோ, காட்சியோ இந்த விதமாக நிமித்த காரணம் ஆகிறது. அதுவும் ஆண்டவன் அருளே.

ஐரோப்பாவில் கிறிஸ்துவ மக்களுக்கு லாரன்ஸ் துறவி போதித்த நெறியும் பவகவத் கீதை உபதேசத்தில் கண்ணன் காட்டிய வழியும் ஒன்றே என்பதைப் பார்த்து நாம் வியப்பும் பெருமையும் நிச்சய புத்தியும் அடையலாம்.

உளன் கண்டாய் நன்நெஞ்சே உத்தமன் என்றும்
உளன் கண்டார் உள்குவார் உள்ளத்து உளன் கண்டாய்
வெள்ளத்தின் உள்ளானும் வேங்கடத்து மேயானும்
உள்ளத்தின் உள்ளான் என்று ஓர்!

இப்படி முதலாழ்வார் உபதேசித்த நெறியே கிறிஸ்துவத் துறவி லாரன்ஸ் போதித்ததும். " பகவான் நெருங்கி நிற்கிறான். அவனைப் பக்கத்தில் நிறுத்திக் கொண்டு அந்தரங்கத் தோழனாக்கிக்கொள். எந்தச் சமயத்திலும் அவனை உன் கண்ணுக்கு முன் வைத்துக் கொண்டு, செய்யும் எல்லாக் காரியங்களையும், எண்ணும் எல்லா எண்ணங்களையும் அவனைத் துணைவனாக வைத்துக்கொண்டு, வாழ்க்கை நடத்துவதைத் தினசரி வழக்கப்படுத்திக்கொள்" என்று ஒரு சிறந்த யோக மாக்கத்தை லாரன்ஸ் உபதேசித்தார். "சர்வ வல்லமையுள்ளவனும் உத்தம அன்பனுமான பகவானைத் துணைவனாக் அமைத்துக்கொண்டு எல்லாவற்றையும் அவனுக்கு அர்ப்பணமாகச் செய். எந்தக் காரியத்தையும், சிறியதாயினும் பெரியதாயினும் அவனிடம் அன்பு செலுத்தி அவனுக்காகச் செய், இவ்வாறு லாரன்ஸ் துறவி உபதேசித்தார்.

எப்போதும் பகவானைப் பக்கத்தில் இடைவிடாமல் நிறுத்திக் கொள்ளும் இந்த அப்பியாசம் கீதையில் உபதேசிக்கப்பட்ட யோகமேயாகும்.

'மத்பர' னாயிருந்து 'மதர்த்தம்' எல்லாக் காரியத்தையும் என்னையே நம்பி, எனக்காகவே செய் - என்று கண்ணன் உபதேசித்ததற்கும் லாரன்ஸ் துறவி உபதேசித்த மார்க்கத்துக்கும் வேறு பாடில்லை, இரண்டும் ஒன்றேதான்.

தாம் உபதேசித்த நெறியின்படியே லாரன்ஸ் துறவி வாழ்க்கையை நடத்தினர். சமையல் வேலையாயினும் பாத்திரங்கள் தேய்த்துச் சுத்தம் செய்வதாயினும் குளிப்பதாயினும் பேசுவதாயினும் தூங்குவதாயினும் எல்லாம் பகவானுடைய பிரீதிக்காக என்று கருதிச் செய்து வந்தார். அதில் அவர் பிறருக்கு விளக்க முடியாத ஆனந்தம் அடைந்து வந்தார்.

மற்றத் துறவிகளைப் போல் அவர் முகத்தில் தவத்தினால் உண்டாகும் துன்பக் குறி ஏதும் தென்பட மாட்டாது. இவர் துறவி என்று யாரும் அவரைப் பார்த்தால் அறிய மாட்டார்கள். பாமர மக்களின் முகத்தைப் போலவே இருந்தது அவர் முகம். பக்திக்காக எந்தத்தனி வேஷமும் அவர் போட்டுக் கொள்ள வில்லை.

சாதாரணமாக, பக்த கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் மற்றவர்களைப் போல் பேசமாட்டார்கள். அவர்களுடைய எல்லா நடவடிக்கையையும் சாதாரண ஜனங்களைப் போல இராது. ஆனால் லாரென்ஸ் துறவியோ எல்லோரையும் போலவே இருந்தார். அவருடன்

சம்பாஷித்த ஒரு பெரியவர் எழுதியி ருக்கிறார்.

"அவர் ஒரு பாமரனைப் போல்தான் இருந்தார். ஆயினும் அவருடைய ஞானமும் தீவிர மேதையும் அந்தப் பாமர வெளித் தோற்றத்தை ஊடுருவிப் பாய்ந்து பிரகாசிப்பதைக் கண்டேன்"

''என்னுடைய வழிபாட்டு முறை துறவிகளுக் குத்தான் சாத்தியம் என்று எண்ணவேண்டாம். அது சாதாரண மக்களுக்கு எட்டாத ஞானமார்க்கம் என்றும் எண்ண வேண்டாம். என்னைப் போலவே பகவானிடம் யாருமே காதல் கொள்ளலாம். யாருமே என்னைப் போல் பக்தியும் செலுத்தலாம்." இவ்வாறு சொல்வார் லாரன்ஸ் துறவி.

''உள்ளத்தைக் குழந்தை உள்ளமாகச் செய்து கொண்டு, தாயை நாடிக் குழந்தை செல்வது போல் ஆண்டவனை எதற்கும் நாம் நாடவேண்டும். இது எவராலும் செய்யமுடியும். தானாக நிற்க முடியாத குழந்தை தாயைப் பிடித்துக் கொண்டு நிற்பதைப் போல் நாம் ஆண்டவனை பற்றிக் கொண்டு எப்போதும் நிற்க வேண்டும். குழந்தை தாயைச் சார்வது போல் நாம் ஆண்டவனுடன் ஒன்றுதல் வேண்டும். மனம் வைத்தால் இதில் கஷ்டமில்லை. சுகமே காணலாம். இவ்வாறு செய்யாமற் போனால் உண்மை யில் யாருமே சுக வாழ்க்கை அடைய முடியாது.''

**கீழ் வருவனவெல்லாம் துறவி லாரன்ஸ் வாசகம்.**

தாயைக் குழந்தை பற்றி நிற்பது போல் பகவானைப் பற்றிக் கொண்டு நிற்பது தான் சரியான வழிபாட்டு முறை. பெரியோர்கள் நமக்கு வகுத்திருக்கும் பிரார்த் தனை முறையும் இதுவே. பகவானை நம்பி வாழாதவன் தன்னையும் அறியான், கடவுளையும் அறியான், மூடனாவன்.

நம்முடைய உள்ளத்தை அடைய ஆண்டவன் மிகவும் விரும்புகிறான். அவனுக்கு நாம் அர்ப்பணம் செய்யும் பொருளாகிய நம்முடைய உள்ளம், சுத்தமாக இருக்கவேண்டும். மனத்தைப் பாவ எண்ணங்கள் நெருங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அந்த எண்ணங்களே நமக்குப் பெரும் சத்துருக்கள். பாப சிந்தனைகளுக்கு இடம் கொடுத்தால் அவை சீக்கிரமே பாபச் செயல்களையும் தூண்டும். அது இல்லையாயி னும் அந்த எண்ணங்களினாலேயே உள்ளத் தூய்மை கெட்டுப்போகும்.

உள்ளத் துப்பரவை நாம் உண்மையில் விரும்பி ஆண்டவனை இறைஞ்சினோமானால் அவன் கட்டாயம் உதவி செய்வான். பாபச் சிந்தனைகளை விலக்கலாம். அவன் வந்து நம் உள்ளத்தில் கோயில் கொள்ள வேண்டும் என்று நாம் தீவிர உணர்ச்சியுடன் விரும்பினால் நிச்சயமாக அவன் அருள்வான். பாப சிந்தனைகளை விலக்கிவிட முடியும்.

நான் என் அனுபவத்தில் கண்டதைச் சொல்கின் றேன். நம்முடைய எல்லாச் செய்கைகளையும் ஆண்ட வனுடைய பிரீதிக்காகச் செய்து வருவதுதான் வாழ்க் கையில் சுகத்துக்கு வழி, அதுவே நன்னெறியும் ஆகும். பகவத் 'பிரீத்யர்த்தம்' அதாவது ஆண்டவனுடைய சந்தோஷத்துக்காக அனைத்தையும் சிறியதையும், பெரியதையும் செய்து கொண்டு போக வேண்டும். கீழே கிடக்கும் துரும்பை எடுத்துப்போடுவதும் அவனுக்காக என்று செய்தால் அந்த அற்பக் காரியத்தில் ஒரு தனி மகிழ்ச்சி உண்டாகும். அவனை நாம் ஒன்றும் கேட்க வேண்டாம். இது வேண்டும், அது வேண்டும், என்று கோராமல் அவனைக் காதலித்து அவனுடைய திருப்திக்காகவே எல்லாம் செய்து கொண்டு போக வேண்டும்.

ஆண்டவனிடம் யோசனை கேட்டும் அவனைத் தோழனாக்கிக் கொண்டு அவனோடு கலந்தும், சம்பாஷித்தும் எல்லாக் காரியங்களையும் எல்லாச் சமயத்திலும் செய்யும் வாழ்க்கை நெறியில், முதலில் கொஞ்சம் விடா முயற்சி செலுத்த வேண்டியதாகும். செலுத்தினால் அவன் இந்த முயற்சியை வெற்றி பெறச் செய்வான் என்பதை போகப் போக நாம் காண்போம்.

ஒரு நல்ல காரியம் செய்யும் அவகாசம் ஏற்படுமானால் "ஆண்டவனே, நீயும் கூட இருந்து உதவினாலொழிய இதை நான் செய்து முடிக்க இயலாது" என்று ஆண்டவனுக்கு சொல்லி இறைஞ் சுவேன். உடனே அந்தக் காரியத்துக்கு வேண்டிய ஆற்ற லையும் அதற்கு மேலேயும் கூட அடைந்து விடுவேன். இதை என் அனுபவத்தில் அடிக்கடி கண்டி ருக்கிறேன்.

ஏதேனும் தவறு செய்து விட்டேனானால் "பகவனே! நீ என்னைத் தனியாய் விட்டு விட்டாய். அதனால் இப்படியாயிற்று. நீ என்னை இப்படி விட்டு விட்டால் நான் தவறுதான் செய்வேன். இது உனக்கு தெரியாதா! 'உன்னுடைய பாடு' என்று என்னைத் தனியாக விட்டு விடாதே" என்று ஆண்ட வனிடம் சொல்லி விட்டுக் கவலையின்றியிருப்பேன். நடந்து போன என் பிழையைப் பற்றி எண்ணி எண்ணி அலையமாட்டேன். உள்ளத்தில் மறுபடியும் ஆண்டவன் புகுந்த பிறகு எனக்கு என்ன கவலை?

**தொடரும்....**

# சோதி சொரூபன்

சுவாமிகளின் அன்பாளர்பலரும் சுவாமிகள் தியான நிலையிலிருக்கும் படத்தினையோ அல்லது கட்டிலில் அமர்ந்து அருள் கனிய நோக்கும் படத்தினையோ வைத்து நியமமாகப் பூசனை செய்து வருவர். தியான மூர்த்தப் படத்தின் முன் அமர்ந்து அதனை உற்றுநோக்கிச் சுவாமி 'உடல் நினைவற்றிருக்கிறார் இறைவனில் இலயித்து இருக்கிறார்' என்ற வண்ணம் எண்ணி எண்ணி

'உடம்பை மறந்துவிடு - தங்கமே தங்கம்
அப்பில் உப்புக் கரைந்தாற் போல் - தங்கமே தங்கம்
ஆண்டவனிற் கரைந்துவிடு தங்கமே தங்கம்'

என்னும் சுவாமிகளின் வாக்குக்குச் சுவாமிகளின் இந்தத் தியான மூர்த்தம் தக்க எடுத்துக் காட்டு எனத் தமக்குள் சொல்லி மகிழ்வார். அருள் கனிய நோக்கியிருக்கும் படத்தைப் பார்த்துப் பார்த்து அந்நோக்கானது 'இதோபார் நான் உனக்கு மிகவும் அணித்தாயிருக்கிறேன். என்னைக் காண்கிறாயா? நல்ல கூர்மையாகப் பார் உள்ளேயிருக்கிறேன். இன்னுந் தெளிவாய்ச் சொல்லில் நான் நீயாயிருக்கின்றேன்" என்று சொல்வதாக உணர்ந்து சுவாமிகளே தானாக விளங்குவதாகப் பாவனை செய்திருப்பர். சுவாமிகளை நேரில் தரிசித்தவர்களும், நெருங்கிப் பழகியவர்களும், திருமேனியைத் தீண்டிப் பணிசெய்யும் பாக்கியவான்களும் தத்தமக்கு வாய்த்த இனிய நினைவுகளை எண்ணி எண்ணி கண்ணீர் முட்ட அமர்ந்திருப்பர். அன்பர் சிலர் ஆண்டுக்கொருமுறை வரும் குருபூசையை அயலிலுள்ள சுவாமிகளின் அன்பாளர்களையும் அழைத்துச் சிறப்பாகக் கொண்டாடுவர். இறைவன் இந்த உருவத்தில் வாராது அந்தச் சொரூபத்திலேயே இருப்பரானால் அவரை அறிந்துய்வார் யாவர்? ஆதலால் எம்போன்றோரும் அறிந்துய்ய மண்மேல் மலரடி வைத்துத் திரிந்த கருணைத் திருவை எப்பரிசாயினும் ஏத்திப் போற்றுதல் தக்கதே.

ஆயினும் 'இறவாதவன் பிறவாதவன்' என்ற அவர் தம் கையெழுத்துச் சாட்சி இருக்கும் பொழுது அவரைத் திருமேனி அளவிலே கும்பிட்டமைதல் எவ்வாறு முழுமையாக அமையும்? 'அவனே நானே' என்ற அவர்தம் சொந்தக் கையெழுத்தும் 'அவனே நானானேனடி' என்ற அவர் தம் வாய்மொழியும் இருக்கும் பொழுது 'இது அவன் திருவுரு இவன் அவன்' எனவே வழிபடுவது முழுமையாக அமையுமல்லவா! குருமேனியைக் கடவுளாகக் கருதுவதே குருநெறிச் செல்வாரது பாரம்பரியமாகும். விழித் தெழுந்த பாவை மகளிர், துயிலெழாத தோழியரைப் பார்த்துச் 'சிவனே சிவனே என்று ஓலமிடினும் உணராய் உணராய்காண்' எனப் பாடுகின்றார்களல்லவா! அது உண்மையில் மணிவாசக சுவாமிகள் தம்மை ஆட்கொள்ள வந்த பரமாசாரியரைச் சிவனெனத் தேறித் தெளிந்து கொண்ட சேதியை தெருவுதோறும் மிக அலறித் தெரிவிக்கும் பிரசித்தமேயாம். எங்கள் சுவாமிகளும் தம்மை ஆள நல்லூர் வெளியிலே பொதுநடம் புரிந்த குருபரனை,

'மொய் குழலாள் பாகம் மறைத்து பரிந்து வந்த பாக்கியத்தைக் கருணையினால் ஆண்டுகொள்ளக் கடவுள் திருவுளங் கொண்டு அருள் மேனி தாங்கி அவனியிலே வந்தான்'

'காட்டிலே காளியுடன் கூத்தாடும் கண்ணுதலோன்
நாட்டிலே ஞான குருவாய் நயந்து வந்து'

'மாலயனுந்தேடி அறியா மலரடிகள், கோல அருட் குருவாய் குவலயத்திலே போந்து'

என்று இன்னவாறு ஒரு பதிகத்திலேயே பலமுறையும் போதுமளவு பாடியிருக்கிறார். சுவாமிகள் தமது குருவைச் சிவபெருமானாகக் கண்டதுபோலவே சுவாமிகளையும் சுவாமி பத்தர் பலரும் சிவமாகவே கண்டு போற்றுபவராயுள்ளனர். சுவாமிகள் 'எண்ணேன் பிற தெய்வம்' என்ற உறுதியினராய் இருந்தது போலவே சுவாமி பத்தர்களுள் சிலர் மற்றோர் தெய்வம் கனவிலும் நினையாதவராய் உள்ளனர். அவர்கள் அவ்வப்போது நல்லூர், கதிர்காமம் என்று சென்றபோதும் அங்கெல்லாம் குருபரனையே தரிசிக்கின்றனர். மணிவாசக சுவாமிகள் உத்தரகோசமங்கை, திருக்கழுக்குன்றம், தில்லைச் சிற்றம்பலம் எல்லா வற்றிலும் தமையாண்ட குருமூர்த்தத்தையே கண்டனரல்லவா! அவ்வாறானதே சுவாமி பத்தர்களது தரிசனமும். சிலர் அங்கிங்கென்று செல்வதுமில்லை.

'அடியேனுக்கு மடம் ஒவ்வொருவருடைய இதயமும் என அறிக'

என்ற வாசகத்தை நெஞ்சிற் பதித்துச் சுவாமிகளை நெஞ்சக் கோயிலிலேயே வைத்துச் சதாபூசித்துக் கொண்டிருக்கின்றனர். ஆகவே சுவாமிகளை அருள்மேனியராகவும், அண்டங்கடந்த பொருளாகவும் கண்டு வழிபடுவதே தக்கது.

சுவாமிகளது திருமேனியை வழிபடும் பழக்கம் நமக்கு மிகவும் கைவந்தது. அவரது கடவுட்

திருக்கோலம் பற்றி நம்புதற்குப் பண்டிதர்கள் கூட சற்றுத் தயக்கம் காட்டுகின்றனர். அவர்களுக்குச் சுவாமிகளது சொரூபத்தைக் கண்டவர்களது வார்த்தைகள் சிலவற்றை நினைவூட்டுவது நல்லதெனப்படுகிறது. சுவாமிகளுக்கு செல்லப்பர் தோயும் அருட் குருவாகிச் 'சொரூபம்' காட்டினரல்லவா! அவ்வாறே சுவாமிகளும் தமது சொரூபத்தைக் காணும் கண் திறந்தோர்க்கு அதனை ஒளிவுமறைவின்றிக் காட்டிவைத்தார். அந்தச் சொரூபத்தைச் சோதி சொரூபம் என்பதும் வழக்கு. தென்முகக்கடவுள் நால்வர்க்கும் காட்டியது ஒளிநெறி என்றே சம்பந்தக் குருமூர்த்தம் கூறுகின்றது. செல்லப்பர் அந்தம் ஆதியில்லாச் சொரூபத்தைக் காட்டச் சுவாமிகள் கண்டு 'சோதிசோதி சிவ சோதி' என்று பாடுகின்றார். அவ்வாறே யோக குருவும் தமது சோதி சொரூபத்தைக் காட்டிச் சோதியாய் நின்றமையை அச்சோதியொளிக்குள் மூழ்கியிருக்கும் மெய்யடியார் கண்டு உளம் ஒடுங்கி நின்றனர். அதற்கு அவர்களது வாய்மொழிச் சான்று ஏராளமாயுள்ளன. அவற்றை மேல்வருமாறு வகுத்துக் கூறலாம்.

1. மெய்யடியாரின் சோதிசொரூபம் தரிசித்தற்கான பக்குவம்.
2. சுவாமிகள் அவருக்குக் காட்டிய சோதி சொரூபம்
3. அந்தச் சோதி சொரூபத்தின் வண்ணங்கள்
4. சோதிசொரூபனான சுவாமிகளைப் போற்றுதல்
5. சுவாமிகளின் சோதிசொரூபத்தை யாவரும் தரிசிக்கலாம் என மெய்யடியார் கூறும் உறுதிமொழி.

### 1. பக்குவம்

இனிய வாசனையால் கவரப்பட்ட கஸ்தூரிமான் அதனைத் தேடிக் கால்விசைத் தோடிய கதை ஞான நூற்பயிற்சியாளர் பலருக்கும் நன்கு தெரிந்த கதையே. அவ்வாறே, இம்மெய்யடியாரும், 'மலர்தரு நாற்றம் போன்று கமழ்ந்த மெய்ப்பொருளின் நறுமணத்தைச் சிந்தையிலே தேனென்றும் பாலென்றும் சுவைக்கலானார். ஆனால் அவ்வாசம் தன்னுள்ளேயிருந்து கமழ்கின்றதோ அல்லது புறத்தே இருந்து வீசுகிறதோ என்பதை அவரால் தெளிவாக இனங்கண்டு கொள்ள முடியவில்லை. அது தானாக இருந்து கமழ்கிறதோ அல்லது அதுவாக இருந்து கொண்டே மணம் பரப்புகின்றதோ என்பதையும் அறிந்து கொள்ள முடியவில்லை. அவ்வாறு கள்ளமாயிருந்து கொண்டு கருத்தினைக் கவரும் அதனைக் கண்டறிய காதல் மிகக் கொண்டார். அதனால் உண்மையைத் தேடி ஊரூராய் அலைந்தார். ஞானத்தைத் தேடி நாய்போல் அலைந்தார். அவரது தாகம் பெருவிடாயாக இருந்தது. இத்தகைய சத்தியதாகம் அவர்தம் பக்குவகாலத்தின் தக்க ஆயத்த நிலை எனக் கூறலாம். இத்தகைய தாகமுடைமையே ஞானபானத்தை அருந்துதற்கான தருணம். அழுதபிள்ளை பால் குடிக்கும். அழுதால் உன்னைப் பெறலாமே என்ற அனுபூதிமான்களின் வாசகங்கள் உள்ளன அல்லவா!

நிலத்தைப் பண்படுத்தப் பயிர்விளையும். ஆயத்தப் படுத்தவேண்டும். அப்போது தான் அவனும் விரும்பிடுவான். அவன்தான் விரும்பவேண்டும்' என்றோர் சுவாமிகளின் அருள்மொழி உளது.

தன்னை நன்கு ஆயத்தப்படுத்திக் கொண்ட மெய்யடியாரைச் சுவாமிகள் விரும்பினார். சுவாமிகள் தம்மோடு கூடி வாழும் பாக்கியத்தை அவருக்கு அளித்தார். கூட்டித் திரிந்த அவரிடத்தே இருந்த குறும்புக் குணங்களை வாட்டி வதக்கித் தொலைத் தெறிந்தார். உள்ளத்தே உறைந்த தூசுகளைத் துடைத்துத் துலங்கச் செய்தார். கண்ணாடி புகை பிடித்திருந்தால் சோதி எவ்வாறு அக்கண்ணாடியில் தெளிவாகப் பிரகாசிக்கும். அவரைப் பளிங்கனைய சித்தாகப் பரிணமிக்கச் செய்தார். இச்சேதிகள் மறைஞானக் கவிஞர்களுக்கு மாத்திரம் கைவந்த மணிவாசகங்களாக அவர்தம் சிவசிந்தனையில் இனிக்கின்றன.

**'உள்ளென்றும் புறம்பென்றும் ஓதமுடியாதவொன்று கள்ளமாயிருந்து கொண்டென் கருத்தினைக் கவர்கின்றதே. நானோ அதுவோ வென்று நவிலமுடியாத வொன்று தேனோ பாலோ வென்றென் சிந்தையிற் சுவைக்கிறதே. பார்த்து மகிழ்வோ மென்று பாரெல்லாம் ஓடி ஓடி வேர்த்துக் களைத்ததல்லால் வேறொன்றும் கண்டதில்லை. கூர்த்த மெய்ஞ்ஞானி யாகும் குருநாதன் கூட்டிச்சென்று.' பார்த்தவருட் பார்வையாலே பரவெளியைப் பார்த்து நின்றேன்.**

### 2. சோதி தரிசனம்

கூட்டித் திரிந்தும், ஆட்டி அலைத்தும் பக்குவப் படுத்திய பின்னர் ஒருநாள் 'மலையேற வருகிறாயா? வா! மேருமலைப்படி ஆறும் (மேருதண்டத்து ஆறு ஆதாரங்கள்) கடந்து உச்சியில் நின்று மெய்யொளி காண்போம்' எனக் கூறி ஆறுபடி தாண்டிச்சென்று அன்பரை ஓர் அருட்பார்வை பார்த்தார். அப்பார்வையினாலே மெய்யடியார் பரவெளியைப் பார்த்து நின்றார். அவ்வாறு பார்த்த விழியினை எவ்வாறு வருணிப்பது சோதி சொரூபமாய் இருக்கும்

உண்மையியல்பை மறைத்திருக்கும் இருளில் மூழ்கி இருளனாய்க்கிடந்த பழியினை மாய்க்கும் ஆழ்ந்தகன்றோங்கிய ஞானவேல் என வர்ணிப்பதே தக்கது.

'............. குருநாதன் கூட்டிச்சென்று பார்த்த அருட்பார்வையாலே பரவெளியைப் பார்த்து நின்றேன்'

'கண்ணுக்கடங்காமல் காதுக்கும் கேளாமல்
எண்ணுக் கடங்காமல் என்னுள்ளே - மின்னி
ஒளிவடிவாய்த் தோன்றி உயிரீர்க்கும் எந்தை
விழியே பழிமாய்க்கும் வேல்'

**3. சோதி சொருபத்தின் வண்ணங்கள்**

**அ. சுட்டிறந்த சிவசோதி**

அந்தச் சோதி தரிசனம் சுட்டிக் கூறவொண்ணாதது. வெட்ட வெளியிலே சுட்டுதற்கு வேறேதும் உளதோ? அதில் நான் என்பது கெட்டொழிந்து விட்டது. நான் ஒழியவே நீ அவன் அது அவள் என்பதொன்றுமில்லை. உள், புறம் என்பதுமில்லை. அது தானே தானாகத் தழைத்து நிற்கும் சிவசோதி. இவற்றைச் சிவசிந்தனை மேல்வருமாறு கூறுகிறது.

'வெட்ட வெளிதனிலே - சிவமே
வேறொன்றும் கண்டிலனே
பட்டப் பகலொளி போற்
பார்த்து மகிழ்ந்தனனே.
வெட்ட வெளியில் நின்று
சுட்டாமற் சுட்டிடவே
கெட்டதெனது கர்வம் - திருவே
கிடு கிடென நடுக்க முற்றேன்.'

'உள்ளும் புறம்பு மொன்றாய்
ஒளிர்கின்ற பேரொளி'
'உள்ளத்தில் என்றும் ஒளிர்கின்ற பேரொளியே'

ஆகவே அதனைப் பரிபூர்ணானந்த சிவானந்த சோதி' எனவும் சிவசிந்தனை பகரும்.

**ஆ. தனக்குள்ளே மாட்டிவைக்கும் சோதி**

அச்சோதியானது தரிசித்தோரைத் தன்னுள் விழுங்கிக் கொள்ளும் தன்மையது. அதனுள் விழுங் குண்டவர் சதா அதனையே பூசித்திருப்பார். காந்தம் இரும்பைக் கவர்ந்து கொள்ளுவது போல தன்னுள் ஈர்த்து வைப்பது.

'எட்டாத சோதி வந்து
என்னை விழுங்கிடவே
முட்டாத பூசை செய்தேன் - திருவே
முழுதும் ஒன்றாச்சுதடி.

நாதனடி தேடி நன்குள்ளே ஆழ்ந்தேனடி
சோதி சொருபமதைச் சுட்டிறந்து கண்டேனடி
கண்ட முதல் நாள் தொட்டுக் காந்தம் இரும்புபோல்
அண்டனடி அடைந்தேன் அற்புதம் ஆரறிவார்.

**இ. சோதி பெருந்துணை**

சோதியைத் துணையாகக் கொண்ட மெய்யடியார் ஒரு பொல்லாப்புமில்லை என்று வாழும் ஞான வாழ்க்கைக்கு ஆளானார். பிறந்த பிறப்பின் பயன் சித்தியாச்சே என்ற செம்மாப்பில் நிலைத்தார். சும்மா இருக்கத் துணிந்து கொண்டார்.

பல்லவி

தோற்றிய சுடரொளி துணையென நம்பினேன்
சுந்தர யோக குருநாதா

அநுபல்லவி

கூற்றுவன் வந்தினிக் கூப்பிடும் போதினில்
மாற்ற மொன்றின்றியே மகிழ்வுடன் செல்வேன்

**ஈ. சும்மா இருக்க வைக்கும்**

சும்மா இருத்தல் சும்மா வருவதன்று. சும்மா இருக்க முயல்பவரையே மனம் மூர்க்கமாக சுற்றிச் சுற்றிச் சுழன்றலைய வைக்கும். தியானத்தில் அமர்ந்து சும்மா இருக்க நாடுவோர் இதனை நன்கு அறிவர். தாயுமானார். 'சிந்தையை அடக்கியே சும்மா இருத்தல் அரிது' எனக் கூறுவார். ஆனால் ஞானத்தைத் தேடி நாய்போலலைந்து குருபரனைக்கூடி உள்ளக்களிம்பு களைப் போக்கி குருபரன் சோதி சொரூபத்தைக் காட்டக் கண்டு அச்சோதியால் விழுங்குண்டவர்க்கு அவர்கள் சும்மா இருக்கவே அது சும்மா வரும். எல்லாருடனும் கூடிவாழுமிடத்தும் எல்லாச் செயல்களையும் செய்யுமிடத்தும் ஒன்றிலும் தாக்குறாது சும்மா இருக்கும் நிலைவரும். சோதி சொரூபமொன்றையே கண்டு மற்றவையெல்லாம் கானல் நீர், இந்திரசாலம், கனவெனக் கொண்டு அவற்றாலெல்லாம் சலனமுறாது சாந்தமாயிருப்பர். பார்த்தால் உலகத்தவர் போல வாழ்ந்து கொண்டு அந்தரங்கத்தில் சாந்தமாயிருப்பர். சண்டையிடும் போதும் சலியான் என்று சுவாமி பாடுகிறாரல்லவா. அவ்வாறே செய்வன எல்லாம் செய்து கொண்டு சலியாதிருப்பர். சிவசிந்தனை இதனை மேல்வருமாறு எளிய இனிய இராகத்துடன் பாடுகிறது.

பல்லவி

சும்மா இருக்கத் துணிந்து கொண்டோமே
சுட்டிறந்த சிவ சோதிக்குள் நாமே.

அநுபல்லவி

இம்மா நிலமெங்கும் எமக்குற வாச்சே
ஏந்திழை பாகனார் இணையடி வாய்ச்சே -(சும்மா)

**சரணம்**

எல்லாஞ் சிவமய மாகவே கண்டோம்
பொல்லாப் பேதொன்றும் புவியினிற் காணோம்
நில்லா வாழ்வினை நிலையெனக் காணோம்.
-(சும்மா)

இவ்வாறு தொடர்ந்து செல்கிறது அக்கீதம்.

**4. சோதிசொருபனான சுவாமிகளைப் போற்றுதல்**

**அ. சோதிசொரூபன்**

சுவாமிகள் மெய்யடியாரைக் கூட்டிச்சென்று சுட்டிறந்த சிவசோதியைக் காட்டினரல்லவா! அச்சுட்டிறந்த சிவசோதியில் வேறு பொருளில்லாமை யையும், அது காந்தம் இரும்பு போல் கவர்ந்துவிடாது விழுங்கியிருப்பதையும், அது சும்மா இருக்கும் சூட்சத்தில் மாட்டி வைப்பதனையும் மெய்யடியார் உணர்ந்தனரல்லவா!! யோககுருபரன் தான் தாங்கியிருந்த மானிடப்போர்வையைக் கழற்றிவிட்டு அச்சிவசோதியாகவே நிறைந்து நின்றால் அது எத்துணைப் பரமாதிசயமாக இருக்கும். சோதியைக் காட்டிய சுந்தரயோகன் அச்சோதியாகவே நிற்பதைச் சிவசிந்தனை மேல்வருமாறு பாடுகிறது.

"சோதி தரிசனம் காட்டாது காட்டியே
சோதி யானானென் றுந்தீபற
சுருதி மொழியானென் றுந்தீபற.

யோக குருபரனின் பூரணக் காட்சி இச்சோதி சொரூபமே. யோக குருபரனின் அருள்மேனி பணிக் காகப் போட்ட ஒரு வேடமே. தூயவர் இந்தச் சோதி சொரூபத்தைக் கண்டு போற்றினர்.

'பொன்னொளிர் சோதி பூரணக் காட்சியை.'
தூயவர் ஏத்திடும் சோதி சொருபனை

**ஆ. சோதி சொரூபனைப் போற்றுதல்**

சுவாமிகள் சோதி சொரூபனென்பதைச் சிவசிந்தனை போதுமளவு போற்றுகின்றது.

இழுத்து இழுத்து இரட்சித்த யோகனே என்ற கீதத்தில்

உளந்தனில் உறை ஒண்சுடர்ச் செம்பொன்னே!
யோக குருவே சரணம் எனும் பாடலில்
சோதி சொருபா சரணம் சரணம்

இப்படியே மற்றைய பாடல்களில்
பரிபூர்ண சிவானந்த சோதி
காண்பரிய பேரொளியே
சோதி சொருபனின் சிவயோகநாதனின்
துய்யனே சுட்டிறந்த சோதியே
உள்ளங்களிலே ஒளிருஞ் சூரியன்
ஒளிக்கெல்லாம் ஒளி கொடுக்கும் உத்தமன்

இவற்றைவிட யோகவொளி ஒளி என்னும் இருபாடல்களின் யோகவொளி ஒரு ஒளி வடிவே என்பதை விவரித்துப் பாடுகிறது. இவ்வாறெல்லாம் விரித்துச் செல்வதிலும் சிவசிந்தனையின் மையமாக விளங்குவது இச்சோதிசொரூபமே எனச் சொல்லுதல் சாலச்சிறந்தது.

**5. சோதி சொரூபத்தை யாரும் தரிசிக்கலாம் எனக்கூறும் உறுதிமொழி**

சுவாமிகளை ஒருமை மனதுடன் இடையறாது நினைத்திருப்போர் யாவருக்கும் சுவாமிகள் வெட்ட வெளியாகத் தமது சோதி சொரூபத்தைக் காண்பிப்பார். அச்சோதி சொரூபத்தைக் காணும் கண் உள்ளதோ என்பதைக் காணவோ அல்லது காணும் கண்ணை விழிக்கச்செய்வதற்கோ சில சோதனைகளையும் தருவார். சோதித்துச் சும்மா இருத்தலே சுவாமிகளது சாலம். இச்சோதனைகளைத் துணிவுடனே தாங்கு வோர்க்குச் சுவாமிகள் தமது சோதிசொரூபத்தைக் காட்டி அருள்வார்.

"நாதனை எண்ணி எண்ணி நாளுமே நைந்திருந்தால்
சோதனை பலவுஞ் செய்து கிளியே சோதியாய்த் தோன்றி டுவான்."

சிவநாமத்தை இராப்பகலாக இடையறாது நினைந்திருப்பவர்க்கும் அச்சிவகுருநாதனின் தோற்றம்

வெட்ட வெளியில் வெளிச்சம் தோன்றிடும்
வேடிக்கை பார்க்க வேண்டுமென்றால்
இட்டமுடன் சிவநாமம் செபியடி
இராப்பகலெல்லாம் இடையறாமல்.

**முடிவுரை**

சுவாமிகளது அருள்மேனியை எத்துணைக் கொண்டாடினாலும் தகுவதே. அத்துடன் அவ்வருள் மேனியிலே சோதிசொரூபத்தையும் நினைந்து பூசித் தலே சுவாமிகளது பூரணக்காட்சியும் முழு வழிபடு தலுமாம். சுவாமிகளும் செல்லப்பரை இவ்வாறுதான் கும்பிட்டார். அவர் நல்லைத் தேரடியிற் கண்ட செல்லப்பதேசிகரையும், தேரடியில் குரு தமக்குக் காட்டக் கண்ட சிவசோதியையும் ஒருங்கே பூசித்தார்.

"இரவு பகலற்ற ஏகாந்த வீட்டில் எனைப்
பரவிப் பணிய வைத்த பரமன் கருணையினால்
சரணகமலமலர் தலைதனிலே வைத்தவனைக்
குரவு மலர் குறையாக் குளிர் நல்லை கண்டேனே"
- கண்டபத்து



சிவதொண்டன்

துர்முகி ஞு சித்திரை - வைகாசி (2017) மே - யூன் இதழ் (05-06)

## சற்குரு தரிசனம்

I

குருநாதன் **"வேர்த்தாற் குளித்து, பசித்தால் புசித்து பார்த்தால் உலகத்தவர் போல"** வாழ்வார். தன்னை அண்டி வரும் அன்பர்களுக்குச் சத்தியதாகத்தை ஏற்படுத்துவார். மெல்ல மெல்லவாக ஞானவித்தையின் நுட்பங்களை எல்லாம் புகட்டுவார். அன்பனுக்குப் பக்குவகாலம் வந்துற்றதும் கணத்தினில் புதிதாக விளங்குவார். திருவடித் தீக்கை வைத்து காலை எழும் கதிரவன் இருளை நீக்கி ஒளி பரப்புதல் போல அன்பனின் அகவிருளை நீக்கி சிவசோதியைக் காட்டி வைப்பார். தினையளவுபோதிலே சிவமாக்கிவைப்பார். அக்கணத்திலே மெய்யன்பாளன் மெய்ம்மறந்து வியந்து நிற்பான். "சிவமாம் தன்மை பெற்ற அம்மெய்யன்பன் இதுவரைத் தன்னோடு " உருவினில் வந்து உடனுறவாடி வாழ்ந்தது சாட்சாத் பரப்பிரமமே என்பதைக்கண்டு இரவுபகலற்ற இன்பநிட்டையிற் பொருந்துவான். இந்த நன்மோன நிறைவினின்றும் குருவடிவாக வந்தது சத்தியவஸ்துவே எனக்கண்டு கொள்வது சற்குரு தரிசனம் ஆகும். (சத்+குரு = சற்குரு. சத் - மெய்ப்பொருள். குரு - மெய்யுணர்வளித்தற் கெனத் தாங்கிய அருள்மேனி. தரிசனம் - காண்டல்).

தேரடியிலே, செல்லப்பன் எனும் நாமம் பூண்டு ஒருவருமறியாது ஓடி உலவித்திரிந்தது குருவடிவம். அது படிப்படியாக ஞான வித்தை புகட்டியபின் ஒருநாள் உவகையோடு உற்றுநோக்கி ஒரு சொல்லால் உபதேசித்துத் திருவடி காட்டி வைத்தது **தீக்கை.** அத்தீக் கையால் நொடிப்போதில் சும்மா இருக்கும் சூட்சத்தில் மாட்டிவைத்தது **மோனஞானம்.** இந்த மோன ஞானத் திலே யோக சுவாமிகள் தமக்கு மெய்யுணர்வூட்ட வந்த தவராசக் குருவடிவமானது மெய்ப்பொருளே எனக் கண்டு கொண்டது **சற்குரு தரிசனம்.**

சுவாமிகள் இதனை அவர்தம் குருதோத்திரப் பாடல் களிலே ஆங்காங்கே தெளிவாக வெளிப்படுத்தியிருக் கிறார். கண்டபத்திலே குருவாக வந்தவர் மெய்ப் பொருள் என்பதை அச்சற்குரு அருளிய மெய்யுணர் வினாலே கண்டுகொண்டதைப் பத்து விருத்தங்களில் விருத்தாந்தமாக விளக்கிப் பாடியிருக்கிறார். அக்கண்டபத்தின் இறுதிப்பாடல் குளிர் நல்லையில் குருவாகக் கண்டவர், பரம்பொருளே என்பதை அவர ருளிய கங்குல் பகலற்ற காட்சியினின்றும் கண்டுகொண் டமையைப் புகழ்ந்து தோத்திரிக்கின்றது.

"இரவு பகலற்ற ஏகாந்த வீட்டில் எனைப்
பரவிப் பணிய வைத்த பரமன் கருணையினால்
சரணகமலமலர் தலைதனிலே வைத்தவனைக்
குரவு மலர் குறையாக் குளிர் நல்லை கண்டேனே"

- நற்சிந்தனை

II

செல்லப்பா சுவாமிகள் சுவாமிகளைத் தானாகச் செய்தனராதலால் சுவாமிகளும் சற்குருவே. ஆயினும் செல்லப்பா சுவாமிகளைப் போன்றே சுவாமிகளையும் சற்குருவாகக் கண்டவர் சிலரே. சுவாமிகள் செல்லப்பா சுவாமிகளைப் போன்றல்லாது மாந்தரோடு அளவளாவி வாழ்ந்தார். அவரைப் பலரும் தரிசித்துச் சென்றனர். அவரே அன்பர்களது இருப்பிடங்களுக்குச் சென்று தரிசனமளித்ததுமுண்டு. ஆயினும் அவரைச் சற்குருவாகக் காணும் பாக்கியம் பெற்றவர் மிகச்சிலரே.

சுவாமிகளைத் தரிசித்தோரிற் பலர் அவரிடம் அன்பும் அருளும் வேண்டியல்லாது பொன்னும் பொருளும் போகமும் வேண்டிச் சென்றனர். அவர்களுக்குத் தாம் வேண்டியனவும் கிடைத்தன. ஆயினும் திருவும் மெய்ப்பொருளும் அருளவல்லவரே தாம் என்பதை அவர்களுக்குக் குறிப்பால் உணர்த்தினர். ஆனால் அவர்கள் அக்குறிப்பினைக் கருத்திற் கொள்ளவில்லை. ஒரு பெரிய சீமானிடம் சென்று ஒருசதம் இரண்டு சதம் வேண்டியவர்களின் நிலையை ஒத்ததாகவே அவர்களது நிலை இருந்தது. அவர்களாற் சுவாமிகள் மெய்ப்

பொருள் என்பதை எவ்வாறு காண்டல் கூடும்?

சாத்திர தோத்திர ஞானங்களிற் சிறந்து விளங்கிய பலர் சுவாமிகளை அடிக்கடி தரிசித்து வந்தனர். அவர்கள் "சிவமே குரு" எனும் திருமந்திரத்தைத் தாரகமாகக் கொண்டிருந்தனர். கல்லால நீழலிலும், குருந்த நீழலிலும் இருந்த அப்பொருளே இன்று ஆச்சிரமத்தில் உறைகிறது என நாத்தழும்பேறக் கூறித் திரிந்தனர்; எழுதினர். ஆயினும் கல்வி என்னும் அல்லலாலும் சாதி, குலம், பிறப்பு என்னும் மானாபிமான இருள் மேகங்களாலும் நான் எனது என்னும் காரிருட் படலத்தாலும் மறைப்புண்டிருந்த அவர்களாலும் சுவாமிகள் மெய்ப்பொருள் என்பதைக் கண்டு கொள்ள முடியவில்லை.

சாத்திர தோத்திர ஞானத்தாற் பெறும் உள்ளத் தெளி வினாலும் பொருள் பற்றிச் செய்கின்ற சிவபூசையாலும் சைவாசார சீலத்தாலும், தேடும் பொருளும் சிவன் கழலே என்ற தெளிவினாலும் பரிசுத்தராகிய பாக்கிய வான்கள் அவ்வப்போது மாத்திரம் சுவாமிகளைத் தரிசித்துச் சென்றனர். அவர்கள் சில தரிசனங்களின் போதே சுவாமிகள் மெய்ப்பொருள் எனக் காணக்கூடிய பக்குவராயிருந்தனர். பளிங்கு போன்ற அவர்களது தெளிந்த அகத்தில் சுவாமிகள் மெய்ப்பொருளே என்பது தெளிவாகத் தென்படக்கூடியதாயிருந்தது. சுவாமிகளும் அவர்களுக்கு ஒளிவு மறைவின்றித் தமது சோதி சொரூபத்தைக் காட்டியருளினார். அவர்களும் நேர்நேராய்க்கண்டு அவ்வனுபவத்தைப் பக்குவமாகப் பேணிவந்தனர். அத்தகைய திருவிளங்கிய பெரியவர் திருவடிக்கலப்புற்ற தருணத்திலே சுவாமிகள் இருந்த இடத்திலிருந்து கொண்டே "அவன் சோதியுட் கலக்கின்றான்" என்று கூறியருளினார். திருவிளங்க தேசிகர் என்ற நாமம் பூண்டிருந்த அவர் சுவாமிகளை மெய்ப்பொருள் எனக் கண்டவர் எனப் பெயர் சூட்டிச் சொல்லக்கூடிய ஒருவராக விளங்குகின்றார். அவரைப் போன்ற இன்னுஞ்சிலர் உள்ளனர். அவர்கள் தங்கள் நாம ரூபங்களைக் காட்டாது மெய்ப்பொருளிற் கரைந்து போயினர். சுவாமிகளுடன் கூடி நல்லைத் தேரடியில் தவமிருந்த மற்றும் ஒருவர் தம்மைக் காட்டிக் கொள்ளாது கடவுளிற் கரைந்து போயினர் அல்லவா! அவ்வாறானவரே சுவாமிகளது இந்த மெய்யன்பாளருமாவர்.

ஞானத்தை அடைய நாய் போல் திரிந்தவரும், உண்மையுணர ஊரூராய் அலைந்தவருமான சிலரும் சுவாமிகளை அண்டி வாழ்ந்தனர். அவர்கள் நானார்? என்னுள்ளமார்? என்ற தீவிர நாட்டம் கொண்டவர்கள். நானோ அதுவோ என்று நாவில முடியாத ஒன்று தேனோ பாலோ என்னச் சிந்தையிற் சுவைப்பதையும், உள்ளென்றும் புறம்பென்றும் கூற முடியாதவொன்று கள்ளமாய் இருந்து கொண்டு கருத்தினைக் கவர் வதையும் உணர்ந்து அதனைப் பார்த்து மகிழ்வோ மென்று பாரெங்கும் தேடி ஓடி வேர்த்துக்களைத்துச் சுவாமிகளைச் சரணடைந்து கிடந்தவர்கள். அவர் களைச் சுவாமிகள் கூட்டிச் சென்று ஒரு அருட் பார்வை யாலே பரவெளியைப் பார்க்கச் செய்தனர். அந்த நாதங் கடந்த ஞானவெளியிலே சுவாமிகள் சத்திய நித்திய வஸ்துவாய் இருப்பதை பேதமின்றிக் கண்டனர். அவர்கள் அந்தக் காட்சியைப் பெற்ற பின்னர் அவ்வருட்காட்சியைக் காட்ட வந்த அருள் மேனியைக் கசிந்துருகிப் போற்றினர். அவ்வருள் மேனி அக்கினியிற் பிரவேசித்த பின்னர் அதனைச் சொல்லற்கரிய சோதியாயும் கண்டனர். சுவாமிகள் அருள்மேனி தாங்கி நடமாடிய காலத்திலே அவரைத் தரிசித்தற் பொருட்டு அவர் இருப்பிடந் தேடிச் செல்ல வேண்டிய தேவையிருந்தது. அவர் சோதி சொரூபமான பின்னர் அத்தேவையுமிருக்கவில்லை. இருந்த இடத்திலேயே தரிசனம், எப்பொழுதுந் தரிசனம் என்ற படி சதா இதய வெளியில் சற்குரு தரிசனஞ் செய்திருந்தனர்.

இவ்வண்ணம் சுவாமிகளைச் சற்குருவாகக் காணும் பாக்கியம்பெற்ற பக்குவர் சிலரே. கதிரவன் உதயத்தின் போது பருவமொட்டுக்கள் மாத்திரம் மலருமன்றோ!

## III

**"சற்குரு தரிசனம் சகலபாக்கியசுகம்"**

(இன்று யோக சுவாமிகளது குருபூசை நாள். இந் நன்னா ளிலே சற்குரு தரிசனம் செய்து சகல பாக்கிய சுகங்களு டனும் வாழ்வோம் என எண்ணுதல் இயல்பே.)

இன்று யோக சுவாமிகளது குருபூசை கொண்டாடு வோரிற் சிலரே சுவாமிகள் மானுட வடிவோடு இருந்த நாட்களிற் அவரைத் தரிசிக்கும் பாக்கியம் பெற் றவர்கள். அவர்களும் அறியாச் சிறு குழந்தைகளாகவும், சுற்றித் திரியும் வாலிபப் பராயத்தினராயும் இருந்த வேளையிலேயே சுவாமிகளைத் தரிசித்தனர். ஆயினும் சுவாமிகள் அவர்களுக்கு

**" நாம் நாம் நாம் நல்ல நாம் நாம் நாம்**
**நமக்கொரு குறைவில்லை நாம் நாம் நாம்"**

என்ற வண்ணம் மழலைப்பாடல் மெட்டில் தூய

# நற்சிந்தனை

உ

## சர்வம் பிரம மயம்

இராகம் - கமாசு தாளம் - ஆதி

பல்லவி

சாந்தம் உபசாந்தம்
சர்வம் பிரம மயம் (சாந்)

சரணங்கள்

சாந்த னையும் மாந்த ரன்பு
கூர்ந் திதனைக் கூறு வீர் (சாந்)

சார்ந்த இட மெங்குஞ் சிவசிவ
தங்கும் பரிமளம் பொங்குஞ் சிவ (சாந்)

தாம் திமிதிமி தரிகிட கிடசெம்
நாம் அதுவென அறிவது கவசம் (சாந்)

தொதிந்தத் தாதாதா தரிகிட
ஏனிந்தப் பாடெங்குஞ் சிவசிவ (சாந்)

அண்ட பிண்டமெங்கும் அதுவெனக்
கண்டுதொண்டு செய்வது தகுதி (சாந்)

## ஞானதேசிகன்

பல்லவி

ஞான தேசிகனே சரணம்
நற்றவனே நல்லூர் வித்தகனே வருக

அநுபல்லவி

ஈனப் பிறவி நீக்கு மெழிலது கண்டேன்
என்னை யென்னாலறிந் தானந்தங் கொண்டேன் (ஞான)

சரணம்

காமக் குரோதமோகக் கடலைக் கடந்தேன்
கங்குல் பகலற்ற காட்சியைக் கண்டேன்
கருதுஞ் சுவாமியோக நாதனுன் தொண்டன்
தருமொரு வரமுண்டு அதுவெங்கும் மங்களம்
தங்கும்படி யருள்தந்து இரட்சி (ஞான)

ஞானத்தைப் புகட்டினர். அவர்களது வயது முதிரமுதிர அந்த ஞானவித்தும் முளைத்துக் கிளைத்துப் பூத்துக் காய்த்து சச்சிதானந்தக் கனியை அருளவல்லதாயிற்று. அத்தகைய ஞானக்கனியை அருந்தும் பாக்கியம் பெற்றவர்கள் சற்குரு தரிசனம் செய்தல் சாலும்.

குருபூசை கொண்டாடும் நம்மிற்பலர் சுவாமிகளது அருள்மேனியை நேரில் தரிசிக்கும் பாக்கியம் பெறாதவர்கள். சுவாமிகளது நோக்கும் வாக்கும் அருளாடல்களும் நமக்கு வாய்க்கவில்லை. இத்தகைய "நம்மாலும் சற்குரு தரிசனம் செய்தல் சாலுமோ?" என ஏங்குதல் இயல்பே. இவர்களது ஏக்கம் தீர்க்கும் விடை "சாலும்" என்பதே. சுவாமிகள் சத்தியப் பொருளாயுள் ளமையாலும், குருமேனிகளில் மானிடப் போர்வை தவிர்ந்த மற்றும் பல அருள்வேடங்கள் உளதாதலாலும் சாலும் என்பது சரியான விடையேயாம்.

"தத்துவாதீதனானான் எங்கள் குருநாதன்" என்பது சுவாமி வாக்கு. மேலும் சுவாமிகள் குரு இலக்கணம் பற்றிய சீரிய குறட்பா ஒன்றைப் பாடியருளியிருக் கிறார்.

"அறிவுக்கறிவாகி அப்பாற் கப்பாலாய்க்
குறிகுண மற்றோன் குரு"

என்பது அக்குறட்பா. இக்குறட்பாவால் அறிவு அறியாமைக்கு அப்பாலான தூய அறிவினராகவும், நாத தத்துவத்துக்கும் அப்பாலான பரவெளியில் குறிகுணமின்றிக் கூத்தாடவல்லவராகவும் இருப்பவரே குரு என்பது குறிப்பிடப்படுகிறது. இத்தகைய குருவைச் சுவாமிகள் தரிசித்தனர் என்பதை அவரது மேல்வரும் பாடல் கூறுகிறது.

"சாதலும் பிறத்தலும் தவிர்த்தெனை யாண்ட
போத குருவைப் புண்ணிய மூர்த்தியை
நாதங் கடந்த ஞானவெளியிடை
பேதமின்றிக் கண்டு பிறப்பற்றோமே
ஓதுக அது நாம் ஓம் தத் சத் ஓம்"

ஆகவே நாதங்கடந்த ஞான வெளியிலிருந்து ஞானந்தெளிவான போதத்தைப் புகட்டும் குருபரனைச் சுவாமிகள் தரிசித்தனர் என்பது தெளிவு. தரிசித்ததுடன் தானும் அக்குருவுடன் பேதமின்றி ஒன்றித்து நிற்பதை உணர்ந்தனர் என்பதும் தெளிவாகிறது. ஆதலால் சுவாமிகளும் நாதங் கடந்த ஞானவெளியில் சாதல் பிறப்பில்லாத நித்தியராய் காட்சி அளிக்கின்றார். இக்காட்சி அற்புதமாகையால் இக்காட்சி நல்கும் சுவாமிகளின் திருமுகத்தை அற்புதத்திருமுகம் எனக் கூறுதலே அழகியது.

" எத்திக்குமாகி நின்றான் எங்கள் குருநாதன்" என்பதும் சுவாமி வாக்கு. அன்றியும்,
"அகரமாம் எழுத்துப்போல அனைத்திலும் கலந்து நின்றே இகபரம் இரண்டும் ஈந்த எழிற்குரு திருத்தாள் வாழ்க"
என்பதும் அவரது குருதோத்திரம். இதனால் ஆணுமாய்ப் பெண்ணுமாகி அன்னையும் பிதாவுமாகி இப்படியே அனைத்துமாகி நின்று அறிவூட்டுவதும் குருபரனின் ஒரு **சுந்தரவடிவம்** என்பது தெளிவு. எல்லாவற்றுடனும் ஒன்றித்து நின்று தரிசனமளிக்கும் சுவாமிகளின் எழில் அவரது நற்சிந்தனையிலுள்ள திருமுகமொன்று காட்டி நிற்கிறது.

உ
சிவமயம்

பார். எல்லாம் சிவமயமாயிருக்கின்றன.
அப்போது நீ யார்? நான் யார்? ஐயா யார்? மற்றும் எல்லாம் என்ன?
சிவமல்லவா! இன்னும் சந்தேகமா? பயமா? பார்
நான் உன்னுடனும் நீ என்னுடனும்
எல்லாம் ஒன்றாகவும் ஒன்று எல்லாமாகவும்
ஒருவித மாறுதலும் அடையாமல்
இருந்தபடியே இருக்கிறது.
எழுந்திரு வரவரப்பபடி.
காலமில்லை. சுகம் சுகம் சுகம்
பிறவாதவனிறவாதவன்

சுவாமிகளது இத்திருமுகம் எல்லாவற்றுடனும் ஒன்றித்து இருந்தபடியே இருந்து ஐயத்துக்கிடமின்றிப் பார்க்குமாறு நம்மை வேண்டி நிற்கிறது. சுகத்துக்குரிய இச்சுந்தரமுகத்தை நாம் வரவரக் கண்டு கொண்டிருப் பது பாக்கியமாகும்.
இறைவன் அப்பாலுக்கப்பாலாயும் அங்கும் இங்கும் எங்கும் பிரகாசமாயும் இருப்பதுடன் அடியார் கண்டுகளிக்கும் வண்ணம் திவ்வியதலங்களிலும் எழுந்தருளியிருக்கிறார். அவ்வாறு எழுந்தருளியிருந்து தாகத்தோடு வந்து தம்மைத் தொட்டுக்கொள்ளும் அன்பர்களுக்குக் கன்றுமுட்டி உண்ணச்சுரந்த காலி அவைபோல அருளாரமுதம் ஊட்டுகின்றார். அவ்வாறே இறைவன் கொண்ட அருட்கோலமான குருவடிவமும் தத்துவாதீதனாயும் அனைத்திலும் கலந்தும் தரிசனமளிப்பதுடன் ஆங்காங்கே கோயில்

கொண்டும் தரிசனமளிக்கிறது. அவ்வாறு தரிசனமளிக்கும் திருத்தலம் பலவெனினும் இரு திவ்விய தலங்கள் அன்பர்களது உள்ளங்களிற் பதிந்துள்ளன. ஒன்று கொழும்புத்துறை சமாதிக்கோயில். மற்றது சிவதொண்டன் நிலையம். சிவதொண்டன் நிலையத்தில் திருவடி வடிவிலும் தங்கவிக்கிரக வடிவிலும் எழுந்தருளியிருக்கிறார். குருபூசை நாட்களில் இத்தங்கவிக்கிரகத்துக்குத் திவ்வியமான அபிடேக ஆராதனைகள் நிகழும். சுவாமிகள் அருள் நோக்கால் அன்பர்களைத் தீர்த்த நீராட்டும் இத்திருக் கோலத்தைக் கண்டு **கருணை பூத்த திருமுகத்தான்** எனக் கொண்டாடுதல் தக்கதே.

சுவாமிகள் தமது திருநூல்களான நற்சிந்தனையிலும் அருள்மொழிகளிலும் மந்திர வடிவமாகக் காட்சி நல்கிறார். நற்சிந்தனையிலே அக்கரந்தோறும் அவர் அமர்ந்திருக்கிறார். பாட்டகத்தே நின்றுருக்குகின்றார். அருள்மொழிகளிலே அவர் நாளும் நாளும் வேண்டிய உபதேசங்களைப் புரிந்து கொண்டிருக்கிறார். இத்திருநூல்களிலே அறமுரைத்த பட்டராகவே அவர் தோன்றுகிறார். இவற்றில் தோன்றும் சுவாமிகளின் திருமுகத்தை **ஞானமொழி பேசுமுகம்** எனக் கூறுதல் நன்று.

"சித்தத்துள் திகழுகின்றான் எங்கள் குருநாதன்"

என்பதும் சுவாமிவாக்கு. சுவாமிகள் எமது உள்ளத்துள் உறைந்து எம்மை உய்யவைக்கும் உணர்வூட்டிய வண்ணம் உள்ளார். எமது எண்ணந்தோன்றுமிடத்தில் இருந்து எமது நீசநினைவனைத்தையும் கண்டும் காணாதவராய் நல்ல எண்ணங்களையே அமுத ஊற்றாகச் சுரந்து கொண்டிருக்கிறார். அவ்வாறு அருளார மூதூட்டிக் கொண்டிருக்கும் தம்மைக் கூர்ந்து பார்க்குமாறு அவரது திருமுகமொன்று கூறுகிறது.

"இதோ பார்.
நான் உனக்கு மிகவும் அணித்தாய் இருக்கிறேன்.
என்னைக் காண்கிறாயா?
நல்ல கூர்மையாகப் பார்.
உள்ளே இருக்கிறேன்."

உள்ளே இருக்கும் யோக குருவைக் கூர்மையாகப் பார்க்கும் பார்வையே நமக்கு வேண்டுவது. உட்கதவிருக்க அதனைத் திறந்து உள்ளே உள்ள மூலபண்டாரத்தைக் காண முயலாது. புறக்கதவைத் திறந்து புறத்தே பாரிற் புகுந்து பிச்சைக்கு இச்சித்துத் திரிதல் என்ன பரிதாபம். ஆடம்பரங்களையெல்லாம் அடியோடு விட்டுவிட்டுச் சித்தத்துள் தித்திக்கும் குருபரனையே ஆறுதலாயிருந்து சுவைத்தல் வேண்டும்.

"சித்தத்துள் நித்தம் திகழும் சிவயோக
அத்தனை ஆழ்ந்துள்ளே பாராமல் - மெத்தவுமே
பத்தி செய்வார் போலவே பாரெங்கும் தேடியே
கத்தித் திரிந்தென்ன காண்."

இவ்வாறு சித்தத்திலே தித்திக்கும் சிவயோக அத்தனின் திருமுகத்தைத் "**தித்திக்கும் திருமுகம்**" என வருணித்தலே இனிது.

சித்தத்துள் திகழும் சுவாமிகள் உள்ளக்கதவுகளை ஒவ்வொன்றாகத் திறந்து விடுகிறார். உள்ளே உள்ளே கூட்டிச் சென்று உயிருக்கு உயிராக இருக்கும் ஆத்ம நாதரைக் காட்டி வைக்கிறார். அவரே ஆத்ம நாதராகவும் இருக்கிறார். ஆருயிர் தோறும் அதுவதுவாயிருக்கும் பேருயிரான அவரது தரிசனம் நம்மைச் சுட்டிறந்து நிற்க வைக்கிறது. உற்றார், பெற்றார், உடன் பிறந்தார் என்ற பிரியாப் பிரியங்கள் பேசாமல் அகல்கின்றன. உயிர்களனைத்தையும் நம்மிலே கண்டு பேரன்பு பெருக்கும் செறிவு வாய்க்கின்றது. நான் என்னும் வீண்பாவனை அடியோடு சாய்கின்றது. தானான தன்மை தலையெடுக்கிறது. நான் தானாய் விளங்கும் முடிந்த ஞானம் நேசானுபூதியாக விளைகிறது. அகச் சோதியாயிருந்து நேசாநுபூதி அருளும் சுவாமிகளது இத்திருமுகதரிசனத்தாலே "நான்" எனும் அரக்கன் அழிவதாலும் தான் தன்னை அறிவதால் வரும் சாந்தம் பெருகுவதாலும் இத்திருமுகத்தை வீரசாந்த முகம் எனப் போற்றுதல் தக்கது.

ஆகவே யோக சற்குரு இன்றும் இக்கணத்திலும் தரிசனமளித்தல் சாலும். அற்புதத்திருமுகமொன்றும், சுந்தர வதனமொன்றும், கருணைபூத்த திருமுகமொன்றும், ஞான மொழி பேசுமுகமொன்றும் தித்திக்கும் திருமுகமொன்றும், வீரசாந்தம் விளங்குமுகமொன்றுமான சண்முக மூர்த்தமாய் அவர் தரிசனம் அளித்தலில் அதிசயமேதுமில்லை. ஆனால்,

நானார் என்னுள்ளமார் என்ற நாட்டம் நமக்கு வேண்டுவதாகும். அந்த நாட்டமும் பெருவிடாய் கொண்டதாக இருத்தல் வேண்டும். அந்த நாட்டத்தில் மையல் சற்றும் இருத்தலாகாது. அது தூங்காத விழிப்பாயமைதல் வேண்டும். வல்லவாறான நாட்டமாகவும் கௌரவமான நாட்டமாகவும் அமைதல் வேண்டும். அவ்வாறு அமைந்தால் சற்குரு தரிசனத்துக்கு ஓர் தடங்கலும் இல்லை.

"நானார் என்னுள்ளமார் என நாடும் மெய்யடியார்
தானாக நின்றருள் செய் சங்கரனே தாரணியில்
கோனாக வந்தாண்டான் குளிரார் திருவடியைத்
தேனார் பொழில் நல்லைத் தேரடியிற் கண்டேனே"

**சண்முகவன் என்னவரு யோகபரன்**

அற்புதமும் இன்னதெனக் காட்டுமுகம் ஒன்றே
அத்தனவன் சுந்தரனென் றாகுமுகம் ஒன்றே
நற்கருணை தன்விழியில் பாய்ச்சுமுகம் ஒன்றே
நன்மொழியை எம்மவர்க்குப் பேசுமுகம் ஒன்றே
சற்கரையை யொத்தினிமை சாருமுகம் ஒன்றே
தன்னிலையைச் சொல்லவல சாந்தமுகம் ஒன்றே
கற்றவரும் கற்றுமுடி யாதவனென் றெம்முள்
சண்முகவன் என்னவரு யோகபரன் தானே

# சிவசிந்தனை

## சுகத்தினைச் செய்கிறதே

உள்ளென்றும் புறம்பென்றும் ஓதமுடி யாதவொன்று
கள்ளமா யிருந்துகொண்டென் கருத்தினைக் கவர்க்கின்றதே

நானோவ துவோவென்று நவிலமுடி யாதவொன்று
தேனோ பாலலோவொன்றென் சிந்தனையிற் சுவைக்கிறதே

பார்த்துமகிழ்வோமென்று பாரெல்லாம் மோடியோடி
வேர்த்துக்க ளைத்ததல்லால் வேறொன்றும் கண்டதில்லை

கூர்த்தமெய்ஞ் ஞானியாகும் குருநாதன் கூட்டிச்சென்று
பார்த்தவருட் பார்வையாலே பரவெளியைப் பார்த்துநின்றேன்

கிட்டாமற் கிட்டிவரும் எட்டாமல் எட்டிப்போகும்
சுட்டியறி யாதவொன்று சுகத்தினைச் செய்கிறதே

தில்லைச் சிதம்பரத்தான் திருவடிச் சேவையொன்றே
எல்லையி லின்பமென்று எமக்கருள் செய்தானன்று

ஆசையை கற்றல்சிவ பூசையெனப் புகன்றான்
நேசமதே நீணிலத்தில் நாசஞ்செய்யும் நம்வினையை

நானேன் பிறந்தேனென்று நைந்துநைந்து நலிந்தேற்கு
நானேதா னென்றுசொல்லி நம்மையாட் கொண்டானன்று

ஒன்றும் றியாதேற்கு ஒன்றினை உணரவைத்த
நன்றிக்கு நான்செய்யும் நன்றிதான் யாதுளதோ

பன்றிக்கு ருளைகட்டும் பாலினைப் பரிந்தளித்தான்
என்றுமுள் ளானன்றே ஏக்கந்தா னேனோவின்று

எட்டாத கொப்பினுக்கு ஏணிவைத்துப் பூப்பறித்து
முட்டாத பூசைசெய்தான் முட்டாளைப் போல்நடித்தான்

நச்சரவம் பூண்டானடி ஞானத்தை நாமடையப்
பச்சைப்பச்சை யாய்ப்பேசி பற்றெல்லாம் பாறச்செய்தான்

சிவயோகன் திருவடியைச் சிந்தித்த மாத்திரத்தில்
அவமான எண்ணமெல்லாம் அடியோ டகன்றுவிடும்

சிவயோகன் திருவார்த்தை செவிகளில் கேட்கச்செய்வார்
தவமது செய்திடுவார் சாந்தமு மெய்திடுவார்

சிவயோகன் திருநாமம் செவியுற்ற போதெல்லாம்
நவமான வுணர்வொன்று நமக்குள்ளே நடமாடும்

சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ
சிவசிவ சிவசிவ சிவசிவ சிவஓம்

The

# Sivathondan

To the Heart that yearns, the Lord draws nigh

Volume: 81 (May - June - 2017 ) Issue : 05 - 06

## NATCHINTHANAI

உ

*Sivamayam*

In my kingdom there is no day or night, no good or evil, no you or I, no today or tomorrow, no big or small. If you also want to enjoy and experience this bliss, you must set forth now with all your heart and soul. You don't need a train or a bullock- cart. What then is required? All you want is the cart of Vaíragya that never has to be renewed and two white bulls which are called santam; and you will need for your journey the uncooked rice of contentment, the shawl of begging alms to cover your body and the spectacles of wisdom. Then, without looking backwards or forwards, follow me. I cannot describe to you the sights that you will see. God is my witness.

I am you.

## THE BEST SECRET

உ

*Sivamayam*

We are all of the same race and religion. Within us there is no change. We are holy beings established in Divinity Itself. All multifarious changes represent the characteristic beauty of Reality. Great souls say that these are maya. This truth can be understood only by those who have grasped it through the magical charm of a life of rectitude - not by others. Because of that, sages have emphatically proclaimed again and again that it is necessary to love all existing lives as one's own. Therefore everything depends upon the practice of rectitude. By establishing our belves in this path of rectitude and by constantly imagining that all are ourselves, we come, through wonderful experiences, to the understanding that we are not gross matter, but conscious beings.

He who never forgets.

# Jaffna Jyothi - Light of Jaffna

During my itinerary throughout India and Ceylon I had visited, and sometimes stayed at, a number of holy places. I had the good fortune of having the darshan of a few mighty spiritual personages and also having close personal contacts with them. Of these personages three need mention here, viz, Venerable Sri Mathuradas of Uttarakhand Kankhal, Hardwar, Rishikesh and Uttarakashi, Venerable Sri Ramana Maharishi of Tiruvannamalai of South India and Venerable Sri Yogar Swamiji of Ceylon. So far, as my personal observation and, experience goes, all of them were God intoxicated, realised Souls.

It was summer of 1933, Srimath Swami Vipulanandaji Maharaj had just returned from the Annamalai University after resigning the post of the Professor of Tamil to shoulder again the responsibility of the General Manager of the Ramakrishna Mission Educational Institutions in the Island. Accompanied by him I left Batticalo Railway Station in the morning and arrived at the Maho Junction, Railway Station at about 2 P.M. We were waiting there expecting the connecting train to reach Colombo station to entrain to Anuradhapura. While both of us were walking together and discussing various topics, all of a sudden Swami Vipulanandaji, telling me "There comes the venerable Yogaswamiji", rushed towards an old Swamiji. The revered Yogaswamiji had a small bundle containing cloth and a book in his hand. Swami Vipulanandaji was exceedingly delighted to see him, at that place itself he immediately prostrated at Yogaswamiji's feet. Then they continued to converse, in between now and then the Venerable Swamiji sang songs in Tamil.

Abruptly while they were talking to each other, Yogaswamiji said, "You [Swami Vipulanandaji are a black snake and he [meaning me] is a red snake." The significance of snake in yoga, is that both of us are sincere aspirants for the Selfrealization of the Divine. We got down at Anuradhapura station, leaving venerable Yogaswamiji to continue his journey to Jaffna. I had all along been observing the physical feature and the mental make-up of Venerable Yogaswamiji. The first impression I had at that time about him was his physical feature and mental stature were akin to those of Venerable Sri Mathuradas Maharaj, who was a great Mahatma and whose behaviour and movements were those of an innocent child, oblivious of so called social conventions and courtesies and who was stark naked roaming about everywhere with lofty spiritual ideas within. He was well proofed against heat and cold, praise and censure, pain and pleasure, and his skin had become darkened due to exposure to heat and cold. Similar was the skin of Venerable Yogaswamiji I observed. My mind went, as if to Uttarakhand and I visualised Venerable Mathuradasji in his usual form.

The Bhagavad Gita had stated about the Titiksa (Endurance) of yearing soul:

*Matrapastu Kaunteya Sitosnah Sukhaduhkhah.*
*Agamapayiunoh Anitiya Starn Titikswa Bharata"*

*- Gita - 2/14 -*

'The contacts of matter, 0, son of Kunti, giving cold and heat, pleasure and pain,
They come and go, impermanent; endure them *bravely,* o Bharata.

*'- Gita -2114-*

Great men think and act alike. Both of them went through the hardships of discipline and endurance during their earlier days. Naturally the question came to my mind as to how this physical transformation took place in the Venerable Yogaswamiji. Thought has tremendous influence over the body. He must

have passed through a series of severe and painstaking penances, Japam and meditations culminating in the vision of the Divine. So I was later on, told by several persons about his severe Tapas and his memorable Success, thereby he raised the status of the Island and created a new place in the spiritual map of the Universe. Man is divine and this manifestation of the Divinity has been once more demonstrated in the life of mankind at large. Here the contribution of Venerable Yogaswamiji is remarkable and phenomenal. For several years during the passage of time Sri Lanka had been waiting for the advent of a Great Mahatma, who not by mere talk or by philosophical discussions or by writing thesis on theology but by living the life of intense *Sadhana* and *Tapas*. They realised God, thus reiterating the existence of God *Sat, Chit, Ananda* [Truth, Existence, and Bliss Absolute]. God does exist and can be realised here and now. God is not colourless abstraction, but can be seen and talked *to*. After the termination of his *Tapas,* he became a *Siddha Purusa* and in the Island he shed the lustre of illumination nay, he illumined the hearts of many aspirants residing in far off countries. From now on begins the long period of his spiritual ministration.

After staying nearly a decade in the island I returned to India on transfer. Then again I had to go back to Ceylon in 1951. This time the duration of my stay was rather brief. I had to go to J affna now and then in connection with mission activities. On the eve of my departure from the island for the second time I went to Jaffna with some of our devotees and met the Venerable Swamiji to say good bye to him, and also receive a message from him, as I had been contemplating to plunge into *Tapas* somewhere in the Uttarakhanda. The devotees and I were present at his Ashram Cottage. The Swamiji went on talking in Tamil, and sometimes in English.

I did not ask him any question but I fully understood what was specially meant for me, I returned to Colombo fully satisfied with what he said. It is needless to mention that the Swamiji could read the thoughts of others even from a long distance.

In 1962, I went to Colombo to attend the opening ceremony of the newly constructed building of the International Cultural Centre there. On Saturday, the 6'h June 1962, Swami Prematmanandaji and I left Colombo in the morning and reached Jaffna at 2 p.m. The same day, and stayed at the North Ceylon Sivathondan Nilayam, Jaffna, during our brief time. That day afternoon while both of us were resting after our meals, we were informed that Rev. Yogaswamiji had come there and was waiting outside in the car for us. So both of us went out to meet him and after a few minutes talk he asked us to get into the car and took us to the place, where his disciple, Honourable Mr. Ramsbotham [later on ordained as Srimath Santhaswami; son of Lord Soul bury, Ex-Governor General of Ceylon] was performing *Tapas* as directed by the Rev. Swamiji. After staying there for sometime we all returned to his *Ashram,* and he talked on spiritual matters till the evening.

Next day, Sunday, the 17'h June 1962, we went again to his *Ashram* in the evening and were with him for nearly an hour or so. That was my last visit, and I did not see him again. When we were about to take leave of him, the revered Swamiji turned towards me and unasked said to me, "You are a rich man, you are a rich man." Then I replied, "I do not want worldly riches". But he did not reply and kept silent; I could very well understand the implication of his utterance by the later experience of mine somewhere in India.

The Swamiji had the wonderful capacity of penetrating into the inner recesses of human hearts, reading their thoughts and *Samskaras,* and of giving necessary and valuable instructions for their gradual and natural spiritual enfoldment. I met some of the Rev. Swamiji's closest devotees who told me about

their unique transformation by translating his instructions into their own lives. Again he had the power of going through the inner workings of everybody and used to render spiritual service at the proper time, but refused to do so if he thought that the proper time did not arrive. Once upon a time, one American friend of mine, who worked as a senior officer of the Mosul Oilfield Corporation In Iraq, came to our Colombo Ashram and me. While discussing on several matters he casually mentioned to me about the spiritual hankering of another American friend who worked in the Pan American Airways Co., New York. I advised the Mosul Oilfield gentleman, to tell the Airways gentleman to write to Venerable YogaSwamiji direct, and if necessary to meet Swamiji, at Jaffna. Needless to say that gentleman wrote to the Venerable Swamiji, who directed him not to come to Jaffna on obvious ground. After two or three years I came to learn that he could not get the permission from the Ven. Swamiji and therefore he could not come to Ceylon. After a few years I met that American gentleman at the Math and then I came to know the root cause of the ven. Swamiji's refusal. I saw that in this gentleman a change had taken place in his life, a life plunging head long towards worldly joys and enjoyments.

By his *Mahasamadhi* on Tuesday the 23rd March 1964, Jaffna lost her most eminent Sage, nay 'The Friend, Philosopher and Guide.' For several years, the Tamil people of the island, Federated Malay States, Singapore and the Ceylon and Tamils living elsewhere had drawn inspiration from the venerable Yogaswamiji, solace and consolation in times of distress and desolation, light and enlightenment in times of bewilderment and darkness. Though he is no more in the physical body, his spirit will continue to exist for a very long time, to influence and inspire posterity. We all wish that all those who had the good fortune to sit at his feet and also had personal contact with him, record and leave their reminiscences in writing, so that the persons who will make their appearance in future will be highly benefited by his soul stirring and noble teachings and messages.

I wish that some devotee who had the good fortune to come into closer contact with the Swamiji kept a chronological record of the Rev. Yogaswamiji's spiritual service, to countless disciples, devotees and admirers. But so far as my spiritual understanding goes, the Rev. Yogaswamiji was a Super Mahatma par excellence and an embodiment of *Kama, Kanchana Tyaga* [renunciation of lust and lucre] who also eschewed name, fame, honour and prestige. But all these came to him unasked and he remained unconcerned and untouched.

Bhagavan Sri Ramakrishna Deva used to say "Sarva Bhute Brahma darehan halo sesa Sadhana - To see Brahman in all beings is the finale of spiritual effort." Yes I could fully realize the mettle he was made up of when he had uttered before us in 1954, 'God is in you. God is in him and God is in her'; as such see God in all beings, and banish all other thoughts.

During my sojourn in the island of Ceylon I had occasion to come into close contact with innumerable people of various creeds and denominations, and of different status in life. He appeared to me as one of the mighty spiritual personages in Lanka. He may be called as the Light of Jaffna or the Jaffna Jyothi. May his spirit live long and illumine the souls yearning for the attainment of the Divine Knowledge and love.

# THE AMRITANUBHAVA

- continue from the last issue

## CHAPTER : 7

### INEFFICACY OF THE WORD

18.What is the use of the reminder when there is no memory or forgetfulness? So the word is of no use in the case of the Absolute Reality.

19. Another good result is obtained by means of the word. But I am afraid to think about it.

20. It is foolish to say that Avidya is destroyed by the -word and then the Atman became conscious of itself.

21. The Sun will first destroy the night and then will rise. These false words would be unworthy to be uttered in the assembly of the wise.

22. Where is that sleep by which the awakened one is offered? Is there awaking that tries to wake up one who is already awake?

23. So there is no Avidya even for the sake of being destroyed. There is no Atman that wants to enter its own state.

24. Avidya is non-existent like the SON of a barren woman. Then what should the axe of right thinking cut into pieces?

25. If the rainbow were real as it seems what archer would not have applied a string to it ?

26.I would beat Avidya by logical thinking if the water in the mirage would quench the thirst of the sage Agasti.

27. If Avidya . were such a thing as to be destroyed by the word then why should not fire easily burn the imaginary city in the sky?

28. Darkness docs not tolerate contact with a lamp. But is there really anything to be destroyed before the lamp?

29. It is futile to light a lamp in order to see the day.

30. The shadow is not there where it does not fall. It is equally not, really there where it falls.

31. It is known in the waking state that the dream which was seen was false. So Avidya does not exist even though it appears to exist.

32. What is gained by storing in a house the ornaments created by the spell of a magician or by plundering a person who is naked?

33. If the person were to eat imaginary dishes for a hundred thousand times, it is nothing more than fasting.

34. The soil on which a mirage does not appear is dry. But is the soil moistened where it appears?

35. If it (Avidya) were real as it seems, men would have been drenched by the rain painted in a picture : fields would have been moistened and tanks filled by it.

36.What necessity would there be to prepare the ink if one were able to write by mixing up darkness?

37.Does not the sky appear as blue to the eyes? (but it is not really blue). In the same way, you should know that the appearance of Avidya is false.

*To be continued*

உ
சிவமயம்

| | | |
|---|---|---|
| 01. | நற்சிந்தனை 7ம் பதிப்பு | 300.00 |
| 02. | NATSINTHANAI (ENGLISH EDITION) | 400.00 |
| 03. | வள்ளியம்மை திருமணப் படலம் | 150.00 |
| 04. | நற்சிந்தனைக் கீர்த்தனைகள் – சாதாரண பதிப்பு | 12.00 |
| 05. | யோக சுவாமிகள் வாழ்க்கையும், வழிகாட்டுதலும் (2ம் பதிப்பு) | 350.00 |
| 06. | என் நெஞ்சில் இடம்கொண்ட ஒரு பெரியார் யோக சுவாமிகள் | 100.00 |
| 07. | நமசிவாய மாலை | 35.00 |
| 08. | தியான காலச் சிந்தனை (புதிய 3ஆம் பதிப்பு) | 35.00 |
| 09. | யோக சுவாமிகள் அருள்மொழிகள் (புதிய பதிப்பு) | 200.00 |
| 10. | சிவத் தியான மாலை (உரையுடன்) | 20.00 |
| 11. | தாயுமான சுவாமிகள் திருப்பாடல் மூலமும் பொழிப்புரையும் | 200.00 |
| 12. | தாயுமான சுவாமிகள் பாடல் (மூலம் மட்டும்) | 80.00 |
| 13. | சைவத் திருமுறைத் திரட்டு (புதிய 4ம் பதிப்பு) | 250.00 |
| 14. | KANDHA PURAANAM | 400.00 |
| 15. | YOGUSWAMI TREASURED MEMORIES | 300.00 |
| 16. | YOGASWAMI LIFE AND SPRRITUAL GUIDANCE | 500.00 |
| 17. | HOMEAGE TO YOGASWAMY | 10.00 |
| 18. | சண்முக கவசம் | 25.00 |
| 19. | முருகன் திருப்பாடற் திரட்டு | 50.00 |
| 20. | ஈழத்துத் திருப்புகழ் | 50.00 |
| 21. | சர்வஞானோத்திர ஆகம ஞானபாதவசனம் | 50.00 |
| 22. | திருவாசகம் | 220.00 |
| 23. | சிவதொண்டன் – செந்தமிழ் ஆங்கில திங்கள் வெளியீடு | |
| | ஆண்டுச் சந்தா a) உள்நாடு | 600.00 |
| | b) வெளிநாடு US $ | 30.00 |

மேற்படி வெளியீடுகளைக் கொழும்பில் பெறும் இடங்கள்

திரு.க. சிவராசா,
5/2, விஷ்னு ரவர்
82 W.A சில்வா மாவத்தை,
கொழும்பு – 06
தொ.பேசி : 0112559360

திரு. சி. மணிவாசகன்,
20 A 2/3, ஸ்ரேசன் வீதி,
கொழும்பு –06
(சனிக்கிழமைகளில் மாத்திரம்)
0112594462

விண்ணப்பங்கள், கடிதங்கள், காசுக் கட்டளை, தபாற் கட்டளை, காசோலை முதலியன அனுப்ப வேண்டிய பெயரும் விலாசமும்.

Cheque, Drafts and Money Orders should be drawn in favour of
Sivathondan Society
434, K.K.S. Road, Jaffna, Sri Lanka.


Bilingual Monthly, Registered at the G.O.P. as News Paper.
No. Q.D / 186 / NEWS / 2017

a) Printer : Harikanan Printers
K.K.S.Road,
Jaffna.

b) Publisher : M. Thilakaratnam

c) Published for : Sivathondan Society Ltd.
434, K.K.S. Road, Jaffna, Sri Lanka
T.P.: 021 - 2222799

Date of Publication : 02.04 .2017

Editor : S. Vinasithamby B.A. (Hons)
Sivathondan Nilayam,
Chenkalady.
Tel: 065 - 2240272


If undelivered please return to:
The Manager , "Sivathondan Nilayam"
434, K.K.S. Road, Jaffna, Sri Lanka.